விலை சதம் 5 | கொழும்பு பதிப்பு | பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

# சுதந்திரன்
# THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.
இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO | Phone 3411
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு | நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு சர்வஜித்து ஹு புரட்டாசி மீ 16வ வியாழக்கிழமை | Colombo, October, 2 1947 | ஹிஜ்ரி 1366 துல்கஃதா பிறை 16 | இதழ் 121

# ஐ. தே. ஸ்தாபனத்தில் பாக்கிஸ்தான் சேர்ந்தது

## அரசாங்க உத்தியோகஸ்தர் தொழிற் சங்க உரிமை

### 63 பாராளுமன்ற அங்கத்தினரின் ஆதரவு இருக்கிறது

### எதிர்க்கட்சியாரின் முதல்வேலை

#### கவர்னர் சம்பளம் குறைக்கப்படுமா?

["சுதந்திரன்" அரசியல் நிருபர்.]

பிரிட்டனிலுள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அனுபவிக்கும் தொழிற்சங்க உரிமைகளை இலங்கையின் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் பெற்றுக் கொடுப்பதற்காக உழைக்க அறுபத்து மூன்று பாராளுமன்ற அங்கத்தவர்கள் எழுத்து மூலம் சம்மதித்து வாக்குறுதி அளித்துள்ளார்கள் என அறியப்படுகிறது.

பாராளுமன்ற எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இவ்விஷயத்திற்கு முதல் இடங் கொடுக்கச் சம்மதித்துள்ளார்களாம். அதுவுமல்லாமல் சமீபத்தில் நடந்த அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தக் காரணமாக வேலையினின்றும் நிற்பாட்டப்பட்டுள்ள உத்தியோகஸ்தர்களையும், தினசரி வேலையாட்களையும் மீண்டும் அவரவர் வேலைகளில் நியமிப்பதற்காக வேலை செய்யவும் கங்கணம் கட்டியுள்ளார்கள்.

நேற்று முன்தினம் நடந்த ஜெனரல் கிளரிக்கல் ஸேவிஸ் கூட்டத்தில் யூ. என். பி. கட்சி சார்பாக ஒரு தேர்தலில் அபேட்சகராக நின்று தோல்வியுற்ற ஒருவரை இப்பொழுது "பப்ளிக் ஸேவிஸ்" கொமிஷனரில் ஒருவராக நியமிக்க அரசாங்கம் முனைந்து நிற்பது சரியல்லவென்று பல அரசாங்க ஊழியர்கள் பேசியுள்ளார்கள் எனறும் பேசப்படுகிறது.

அரசியல் வாதிகளை "பப்ளிக் ஸேவிஸ்" கமிஷனர்களாக நியமிப்பது அரசாங்க ஊழியர்களை அரசியல் வாதிகளாக்குவதற்காகவே என்று இது சம்பந்தமாக என்னுடன் பேசிய ஒரு பிரபல உத்தியோகஸ்தர் கூறினர்.

பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்ற சில அபேட்சகர்கள் செனட் சபையில் இடம் பெறுவதற்காகப் பாராளுமன்றச் சபைப் பிரதிநிதிகளின் வாக்குக்களைச் சேகரிக்க வேலைகள் செய்துவருகின்றனர்.

ஏழு பிரதிநிதிகள் ஒருவருக்கு வாக்களித்தால் அவர் செனட் சபையின் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டவராவர்.

எதிர்க் கட்சி அங்கத்தவர்கள், தேர்தலில் தோற்றவர்களை செனட் சபைக்குத் தெரிவு செய்யமாட்டார்கள் என்றே கூறப்படுகிறது. அவர்கள் கூறும் காரணம், அது பொது ஜன விருப்பத்திற்கு மாறானதாம் என்பதே.

பாராளுமன்றத்தின் இடதுசாரிக் கட்சியினர் கவர்னரின் சம்பளத்தை ஆறுயிரம் ரூபாய் ஆக்கவேண்டுமென்று கெதியில் பாராளுமன்றத்தில் கோருவார்கள் என அறியப்படுகிறது.

அத்துடன் கண்டி, நுவரெலியா ஆகிய இரு இடங்களிலுமுள்ள கவர்னர் மாளிகைகளை வேறு உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

## உலக முஸ்லிம்களுக்கு வேண்டுகோள்

### இந்தோனேஷியாவில் டச்சு அக்கிரமம்

#### அமெரிக்காவின் தந்திரம்

மாஸ்கோ, செப். 30

மத்திய ஆசியா, கஸாக்ஸ்தான் முஸ்லிம மதத் தலைவர்கள் சங்கத்தின் தலைவரான முப்தி மஜீதகான், டாஷ்கென்ட் நகர் ரேடியோ மூலம் உலக முஸ்லிம்களுக்கு கீழ்கண்ட வேண்டுகோள் விடுத்தார்:- இந்தோனேஷியாவில் டச்சுக்காரர்கள் புரியும் அட்டூழியத்தைக் கண்டு சோவியத் ஆசியாவின் குடியரசு நாடுகளிலுள்ள முஸ்லிம்கள் மனத்துயர் அடைகிருர்கள். இந்தோனேஷியாவிலுள்ள நம முஸ்லிம் சகோதரர்கள நான்கு வருடகாலம் ஜப்பானியர் ஆதிக்கத்தில் கஷ்டமுறறும் அவர்கள தங்கள் சுதந்திரவேட்கையை கைவிடவில்லை இரண்டு வருட காலமாக அவர்கள் டச்சுக்காரர்களின அக்கிரமங்களை எதிர்த்து தங்கள் சுதந்திரத்தை நிலைநாட்டப போராடுகிருர்கள். இந்தோனேஷியாவிலுள்ள 7 கோடி மக்கள் சுதந்திரமாக வாழ வொட்டாது ஏகாதிபத்திய நாடுகள் முட்டுக்கட்டை போட்டு வருகின்றன. சத்தியம் ஜெயிக்கும். இந்தோனேஷிய மக்கள வெற்றியுறுவார்கள். டச்சு அக்கிரமத்தை உஸ்பெக், டாட்ஜிக், டவுக்மேனியன், கிர்கிஸ ஆகிய சோவியத குடியரசு நாடுகள் பலமாகக் கண்டிக்கின்றன.

#### அமெரிக்க தந்திரம்

பட்டேவியா, செப். 30

6 ஸதானிகர்கள் கமிட்டி இந்தோனேஷிய யுத்த நிறுத்த விசாரணை செய்து முடிநத பின்னர் அமெரிக்கஸதானிகர் கேட்டிருந்த அமெரிக்க ராணுவ அதிகாரிகள் இன்று தான வந்து சேர்ந்தனர். புயல் காற்றுல அவர்கள் ஹாவாய் தீவில் அகப்பட்டுக் கொண்டதால் தாமதமாயிற்று என்று தெரிவித்தார்கள். [ராய்ட்டர்]

## பாதுகாப்புக் கவுன்ஸில்

### ஆசியாவுக்கு பிரதிநித்துவமில்லை

நியூயார்க், அக் 1

பாதுகாப்பு கவுன்ஸிலில் காலியான மூன்று ஸ்தானங்களில் மூன்ருவது ஸதானத்திற்கு 7 தடவை தேர்தல்கள் நடைபெற்ற பின் உக்ரைன் தெரிந்தெடுக்கப்பட்டது. இந்தியா தெரிந்தெடுக்கப்படவில்லை. சோவியத் யூனியனின் ஸ்லேவ் நாடான உக்ரைனும் பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு தெரிந்தெடுத்ததுபற்றி ரஷியப் பிரதிநிதி மகிழ்ச்சியடைந்தார். அவர் உக்ரைனுக்காக வோட் சேகரிக்க முயன்றதை இந்தியா பிரதிநிதி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் ஆட்சேபித்தார்.

பாதுகாப்புகவுன்ஸிலில் ஆஸ்திரேலியாவின் ஸதானம் காலியாகிவிட்டதால் அதற்குப் பதில் இந்தியா தெரிந்தெடுக்கப்படாததால் பாதுகாப்பு கவுன்ஸிலில் காலியான மூன்று ஸதானங்களில் இரண்டு ஸதானங்களுக்கு ஆர்ஜன்டைனவும், கானடாவும் தெரிந்தெடுக்கப்பட்டன. மூன்ருவது ஸதானத்திற்கு இந்தியாவும் உக்ரைனும் போட்டியிட்டன. பாதுகாப்பை உத்தேசித்தும் ஜனநாயகமுறையை உத்தேசித்தும் ஆசியாவுக்கு இருக்க வேண்டிய ஒரு ஸதானம இல்லாமல் போய் விட்டதென்றும் அவர் ஓர் அறிக்கை வெளியிட்டார். (ராய்ட்டர்)

## இந்திய ரேடியோவில் இலங்கைப் பிரதிநிதி

### சனிக்கிழமை இரவு பிரசங்கம்

கொழும்பு, அக். 2

இலங்கை அரசாங்கத்தின் இந்திய தொழிற் கமிஷனராகக் கடமையாற்றி வரும் திரு. அன்னெஸலி டி சில்வா அடுத்த சனிக்கிழமை இரவு 9-45 மணிக்கு டெலி அகில இந்திய ரேடியோவில் இருந்து இலங்கைச் சரித்திர வளர்ச்சி சமபந்தமாக ஒரு பிரசங்கம் நிகழ்த்துவார்.

## காந்தி ஜெயந்தி

அஹிம்சா மூர்த்தியும், ஐக்கிய நேச ஸ்தாபனம் அநுப்பாடுபட்டு நிறுவ முயற்சிக்கும் உலக சமாதானத்தை உலகில் நிலைநாட்டும் தாமோபதேச ஆத்மசக்தியும் வாய்ந்தவரான மகாத்மா காந்தியின் 78-வது பிறந்த தினக் கொண்டாட்டம் இன்று நடைபெறுகிறது உலகின் பல பாகங்களிலுள்ள பேறிஞர் கூட்டத்தாரும் பல இடங்களில் குடியேறியுள்ள இந்தியர்களும் இன்றைய தினத்தைக் கொண்டாடுகிருர்கள். இந்தியாவில் இன்று அரசாங்க விடுமுறையாகும். இன்றைய காந்தி ஜெயந்தி இந்தியாவெங்கும் கொண்டாடப்படுகிறது. இலங்கையிலும் பல இடங்களில் கொண்டாடப்படுகிறது இலங்கையிலுள்ள இந்திய சர்க்காரைச் சேர்ந்த காரியாலயங்களுக்கு இன்று விடுமுறையளிக்கப்பட்டிருக்கிறது.

## வட மாகாண வைத்திய சூப்ரன்டெண்ட்

### டாக்டர் குருசாமி நியமனம்

யாழ்ப்பாணம், அக். 1

மட்டக்களப்பு பகுதி வைத்திய சூப்ரன்டெண்டாக இருந்த டாக்டர் ஸி. குருசாமி இப்பொழுது வட மாகாண வைத்திய சூப்ரன்டெண்டாக நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில், யாழ்ப்பாணம் சிவில் ஆஸ்பத்திரியில் இருந்த டாக்டர் செல்லத்துரை குருணாக்கலுக்கு மாற்றப்பட்டுள்ளதால அந்த இடத்துக்கு அனுராதபுரத்திலிருந்து டாக்டர் டி. ஏ. பிரீவின் மாற்றப்பட்டுள்ளார்.

வட மாகாண வைத்திய சூப்ரன்டெண்டாக இருந்த டாக்டர் ஸி. கர்னையா தமது உத்தியோகத்திலிருந்து ஓய்வெடுக்கும் காலத்துக்கு முன் ரஜாவில் சென்றுள்ளதால் இப்பொழுது டாக்டர் குருசாமி பதவி ஏற்கும்வரை தற்காலிகமாக டாக்டர் வி. துரைசாமி இப்பதவியை வகிப்பார்.

## ஆசிய தொழிலாளர் சமூக பாதுகாப்பு

### டில்லி மகாநாட்டில் விவாதிக்கப்படும்

மான்ட்ரீல், அக். 1

ஆசியாவிலுள்ள தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு சுபீட்சத் திட்டங்கள் குறித்து டெல்லியில் அக்டோபர் 27-ம் தேதி முதல் நவம்பர் 8-ம் தேதி வரை நடைபெறும் உலக தொழில் ஸதாபன ஆசியா பகுதி மகாநாட்டில் விவாதிக்கப்படும். இது சம்பந்தமாக ஆசியநாடுகளின் அதிகாரிகளைக் கலந்து உலக தொழில் ஸதாபனம் ஒரு அறிக்கை தயாரித்திருக்கிறது. அதன் மீது விவாதம் நடைபெறறு முடிவு செய்யப்படும். [ராய்ட்டர்]

## "ஜல ஜவஹர்"

### புதிய இந்தியக் கப்பல் வெள்ளோட்டம்

நியூகாஸில், செப் 30

இன்று இந்தியா ஹை கமிஷனர் கிருஷ்ணமேனன, வால்சந்த ஹீராச்சந்த அழைப்புக்கிணங்க ஸிந்தியா ஸ்டீம நேவிகேஷன் கம்பெனியின் புதிய கப்பலான "ஜலஜவஹர்" கப்பலை வெள்ளோட்டம் விடுகிருர். [ராய்ட்டர்]

## கள்ளுத்தவறணை வைந்துள்ள இடத்துக்கு ஆட்சேபனை

### நீர்கொழும்பு புத்த சமய மக்களின் எதிர்ப்பு

நீர்கொழும்பு, அக். 1

கட்டுவாப்பிட்டியா ரஸதாவில் உடையார் தோப்பு என்னுமிடத்தில் கள்ளுத்தவறணையை அதிகாரிகள் வைக்கத் தீர்மானித்திருப்பதை புத்த சமய மக்கள் பலமாகக் கண்டித்து அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துள்ளனர். பிரபல புத்த ஆலயத்தில் இருந்து சிறிது தூரத்திலே புதிய தவறணை அமைக்கப்பட்டு இருக்கிறது.

## தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பிரதிநிதித்துவம்

### கவர்னருடன் தமிழ் காங்கிரஸ் தலைவர்கள் பேட்டி

கண்டி, அக். 2

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானப்படி நேற்று காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், காங்கிரஸ் காரியதரிசி டாக்டர் ஈ. எம் வீ. நாகநாதனும் யாழ்ப்பாணத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பாராளுமன்ற சபையிலும், செனட் சபையிலும் நியமன அங்கத்துவம் கொடுக்க வேண்டுமென்று கண்டியில் மேதகு கவர்னரைப் பேட்டி கண்டுவற்புறுத்தினர்கள்.

வட மாகாணத்தில் எந்தவிதமான கூட்டுத் தொகுதியை ஏற்படுத்தினுலும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு இடத்திலும் நெருக்கமாக இல்லாதபடியால் அவர்களில் ஒருவரைப் பிரதிநிதியாகத் தேர்தலில் தெரிவு செய்வது முடியாத காரியமாகையால் கட்டாயம் நியமன அங்கத்துவம் இரு சபைகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்க வேண்டுமென்று ஒரு மனு தியாலத்திற்கு மேலாக இருவரும் விளக்கி வைத்தார்கள் என அறியப்படுகிறது.

## ஆப்கானிஸ்தானத்தின் ஆட்சேபனை

### ஆசிய நாடுகளில் ஒன்றெனப் பண்டித விஜயலட்சுமியின் வரவேற்பு

### ரஷியாவைப்பற்றி மர்மம்

#### அமெரிக்க அந்நிய நாட்டு மந்திரி மார்ஷலின் தம்பட்டம்

நியூயார்க், செப். 30

இன்று பாகிஸதானும் யெமனும ஐக்கிய தேச ஸதாபனத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இரண்டு நாடுகளையும் சேர்த்துக்கொள்ளும்படி பிரிட்டிஷ் பிரதிநிதி தீர்மானம் கொண்டுவந்தார். மொத்த முள்ள 55 நாடுகளின் பிரதிநிதிகளில் ஆப்கானிஸதானத்தின் பிரதிநிதி பாகிஸதான் ஐக்கிய தேச ஸதாபனத்தில் சேருவதை ஆட்சேபித்ததால் தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டது. ஆப்கானிஸதானம் மட்டும் பாதகமாக வோட்டளித்தது. மற்ற 54 பிரதிநிதிகளில் 53 பேர்கள் சாதகமாக வோட்டளித்தனர். ஒரு வோட் குறைவாக இருப்பதை அறிந்து தலைவர் எந்தநாட்டுப் பிரதிநிதி வோட்டளிக்கவில்லையென்று கேட்டதற்கு எவரும் பதிலளிக்கவில்லை. கைகளை உயர்த்திவோட்டுகள் எண்ணப்பட்டதால் எந்த ஒரு நாடு வோட்டளிக்கவில்லை யென்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அது மர்மமாகவே இருக்கிறது.

வாக்களிக்கமறுத்த ஆப்கன் பிரதிநிதி பின்வருமாறு தெரிவித்தார்:- பாக்கிஸதான் மக்கள் சுதந்திரமடைந்தது பற்றி சந்தோஷம். ஆனல் பாக்கிஸதானைச் சேர்ந்த வடமேற்கு எல்லைப்புற மாகாணவாசிகள பாக்கிஸதானில் சேர சம்மதமளிக்காமலே அது பாக்கிஸதானுடன் சேர்க்கப்பட்டிருப்பதால், அவர்கள் முடிவு செய்யும்வரை பாகிஸதானை ஐக்கிய தேச ஸதாபனத்தில் சேர்ப்பது உசிதமில்லை இது சமபந்தமாக பிறகு நான் ஒரு தீர்மானம் கொண்டுவருவேன்.

இந்தியாவின் பிரதிநிதி பாக்கிஸதானை வரவேற்றுப் பின்வருமாறு பேசினர்:- எங்கள் சகோதர நாடு பாக்கிஸதான் ஐக்கிய தேச ஸதாபனத்தில் சேருவது பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியுறுகிறேன். ஏற்கெனவே அது இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்து இந்த ஸதாபன நடவடிக்கைகளில கலந்து கொண்டிருக்கிறது. ஆசியா நாடுகளில், விஸதீரணம், ஜனத்தொகை, சக்தி இவை சமபந்தமாக அதற்குள்ள நிலைமையை நாங்கள் அறிவோம் ஆதலால் அது ஐக்கிய தேச ஸதாபனத்திலிருப்ப ஆசியா மக்களான எங்களுக்கு அதிக பலமேயாகும். ஐக்கிய தேச சாஸனக் கொள்கையை அனுஷ்டித்து பாக்கிஸதானம் உலக சமாதானத்திற்காக உழைக்கு மென்று நம்புகிறேன். யெமன நாட்டையும் வரவேற்கிறேன்.

அமெரிக்க பிரதிநிதி மார்ஷல் பத்திரிகா நிருபர் கூட்டத்தில் பேசியபோது, பாக்கிஸதானுடன் ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் அமெரிக்கா ஒத்துழைக்குமென்று தெரிவித்தார்.

மற்றும் ஐக்கிய தேச அசெம்பிளியில் பிரிட்டன், பாரசீகம், ஈராக், எகிப்து துருக்கி லெபானன், பிரேஜில் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பாக்கிஸதானை வரவேற்றுப் பேசினர்கள்.

அதன் பிறகு பாக்கிஸதான் பிரதிநிதியும் யெமன் பிரதிநிதியும் மற்ற 55 நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஆசனங்களில அமர்ந்தனர் ஆகவே இப்பொழுது ஐக்கிய தேச ஸதாபனத்தில் மொத்தம் 57 நாடுகள் அங்கம் வகிக்கின்றன

பாக்கிஸதான் பிரதிநிதி சர். ஜபருல்லாகான் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- பாக்கிஸதான் இந்தியாவின் ஒருபகுதியாதலால் அது ஐக்கிய தேச ஸ்தாபனத்திற்கு புதிய அங்கத்தினரல்ல உலகில் நிரந்தர அமைதியை நிலைநாட்ட பாக்கிஸதான் பாடுபடும்.

யெமன் பிரதிநிதி இளவரசர் அப்துல்லா பேசியபோது ஐக்கிய ஸதாபனத்தின் லட்சியங்களுக்காக தனது நாடு உழைக்குமென்று தெரிவித்தார். (ராய்ட்டர்)

## ஸ்தல ஸ்தாபனங்களுக்கு புதிய சம்பளத் திட்டம்

கொழும்பு, அக். 2

ஸ்தலஸ்தாபன சர்க்கார் கமிஷன் நேற்று முன்தினம் ஸ்தல ஸதாபனங்களின் புதிய சம்பளத் திட்டத்தை வெளியிட்டுள்ளது. அத்திட்டத்தில அர்பன் சபைகள், நகர கவுன்ஸில்கள், ஜில்லா ரஸதாக் கமிட்டிகள், கிராமக் கமிட்டிகள் ஆகியனவற்றில் வேலை செய்யும் சிப்பந்திகள் உத்தியோகஸதர் ஆகியோரின் சம்பள விஷயங்கள் தெளிவாக வெளியிடப்பட்டுள்ளன இத்திட்டம் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது. இத்திட்டத்தின படி தகுதிவாய்ந்த ஒருவர் கிராமச் சங்கத்தில் இருந்தாலும் அவர் முனிஸிபல் சபைவரையும் உத்தியோக உயர்வு பெற முடியும். நேற்று முதல் புதிய சம்பளத் திட்டப்படியே பதவிகளுக்கு உத்தியோகஸதர்களை நியமிக்கப்படும்.

கொழும்பு, அக் 2

இன்று மே. த. கவர்னர் அவர்கள் கொழும்பு ராணி மாளிகைக்கு மீள்வார் என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஞு புரட்டாசி மீ 16உ
வியாழக்கிழமை


## தாழ்த்தப்பட்ட வகுப்பினர்

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு நியமன ஸ்தானங்கள் பாராளுமன்ற சபையிலும் செனட் சபையிலும் கொடுக்க வேண்டும் என்று தமிழ்க் காங்கிரஸ் சமீபத்தில் ஓர் தீர்மானம் செய்தது. இவ்வாறு தமிழ்க் காங்கிரஸ் செய்த தீர்மானத்தைக் கண்டித்து சில தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகள் என்று தான்தோன்றிகளாக ஏற்பட்டிருக்கும் சிலர் சிங்கள முதலாளிகளின் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட ஆரம்பித்திருக்கிருர்கள். இது சகஜம். ஏன்? தாங்கள் என்ன செய்கிருேம் என்பது அறியாமற் செய்யப்பட்ட காரியம். கடைசி வரை யாரால் தங்களுக்கு நன்மை கிடைக்கும் என்பதையுணராமல் செய்யும் காரியம். தமிழர்களுக்கு எதிராயுள்ளவர்களின் பசப்பு வார்த்தைகளில் ஈடுபட்டு செய்யப்பட்ட காரியம் இது. ஆகவே, இதை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை.

உண்மை எது என்பதை வெளியிட வேண்டியது எமது கடமையாகிவிட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்போரின் எண்ணிக்கை சுமார் ஒன்று—ஒன்றரை லட்சம் என்பார்கள். இது வட மாகாணம், கீழ் மாகாணங்களிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. வடமாகாணத்தில் மட்டும் சுமார் 17,000 நளவர், 16,000 பள்ளர், 5000 பறையர்கள் ஆக 38,000 பேர் ஆவார்கள். இவர்களுக்குப் பிரதிநிதியாக வர வேண்டும் என்று இரண்டு மூன்று பேர் கிளம்பியுள்ளார்கள். நளவர்களும், பள்ளர்களும் சேர்ந்து பறையர்களை விலக்கிக் காரியங்கள் கொண்டுபோக வேண்டும் என்று ஒரு கட்சி இவர்கட்குள்ளே கிளம்பியிருக்கிறது. நேற்று வரையில், தான் நளவன் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்பட்டுக் கொண்டிருந்த தலைவர் கௌரவ ஸ்தானம் கிடைக்கப்போகிறது என்று தெரிந்ததும் தான் நளவன், தனக்கு அந்த ஸ்தானம் கிடைக்க வேண்டும் என்று கேட்டு முன்வந்திருக்கிருராம்.

இத்தலைவர்கள் தேர்தலுக்கு முன்னதாகவே யூ. என். பிக் கட்சியின் வலைகளுக்குள் சிக்கிக்கொண்டார்கள். வட மாகாணத்தில் யூ. என். பிக் காரர்களுக்காக வேலை செய்தால் தங்களுக்கு நியமன ஸ்தானம் கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அந்த ஒப்பந்தப் பிரகாரம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களில் பொது மக்கள் கேட்கவில்லை. யூ. என். பிக் காரர்கள் தோற்றுப்போனுர்கள். தோற்றுப்போன பிறகு தங்கள் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவார்களா?

ஒப்பந்தம் செய்து கொண்ட தலைவர்கள் யூ. என். பித் தலைவர்களைக் கண்டார்கள். அவர்கள் என்ன சொன்னுர்களாம் தெரியுமா? சிங்களவர்களிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் இருக்கிருர்கள். அவர்கள் எங்களுடன் ஒத்துழைத்தவர்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஸ்தானம் ஒன்றுதான். இந்த ஸ்தானத்தைக் கவர்னர் யாருக்குக் கொடுக்கப் போகிருரோ தெரியாது. இதனிடையே தமிழ்க் காங்கிரஸ்காரர்கள் போட்டுக் குழப்புகிருர்கள். ஆயினும் எங்களால் ஆனதைச் செய்கிருேம் என்று சொல்லிவிட்டார்களாம்.

இவ்விதம் தூண்டிவிட்டால் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குக் கோபம் வராமல் என்ன செய்யும். தங்களுக்குக் கிடைக்கவிருந்த ஸ்தானத்தைத் தமிழ்க் காங்கிரஸகாரர்கள் அல்லவோ கெடுக்கிருர்கள் என்று கோபம் வருவது சகஜந்தானே! நாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஓர் புத்தி சொல்லவேண்டியிருக்கிறது. இந்தியாவைக் கவனியுங்கள். வெகுகாலம் வரையில் வெள்ளை அதிகாரிகளிடம் அகப்பட்டுக் கொண்டு விழித்தார்கள். தங்கள் இந்து சகோதரர்களைத் துவேஷித்தார்கள். வெள்ளையர்கள் செய்தது என்ன? இரண்டொருவருக்கு உத்தியோகங்கள் கொடுத்தார்கள். பட்டங்கள் கொடுத்தார்கள். ஆலயப்பிரவேசம் வேண்டும் என்று சொன்ன காலத்தில் இந்து மதத்தில் தலையிடமாட்டோம் என்ருர்கள். ஏன்? ஜாதி இந்துக்களையும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களையும் பிரித்து வைத்ததில் பல வருஷம் அரசாங்கம் செலுத்த வசதியாயிருந்தது. பிறகு இவர்கள் ஜின்னுவை அண்டினுர்கள். அவர் எல்லோரும் இஸ்லாமாகுங்கள் என்ருர். பிறகு அம்பேத்காரை பிடித்தார்கள். அவர் காங்கிரஸிற்கும் மகாத்மாவுக்கும்விரோதமாய்ப் பேசினுர். கடைசியாகக்காங்கிரஸ்அதிகாரத்திற்கு வந்ததும் எல்லாக் கோயில்களும் திறக்கப்படவில்லையா? காங்கிரஸை தூஷித்துக்கொண்டிருந்த அம்பேத்காருக்கும் ஷண்முகம் செட்டியாருக்கும் உயர் பதவி கொடுக்கவில்லையா? இதற்கு யாராவது மனுப் போட்டுக் கொண்டார்களா? இந்துவும் இந்துவும் பிரிக்க முடியுமா? வெள்ளையனும் தாழ்த்தப்பட்ட வகுப்பானும் ஒன்ருகக் கருதி அவர்கள் நடப்பார்களா?

அதுபோல், பெரும்பான்மையான சிங்களவர்கள் தமிழ் ஜாதியாரையே அடக்கியாளப் பார்க்கிருர்கள். இந்தப் போராட்டத்தில் தமிழர்களைப் பிரிப்பதற்காக, தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பிடித்துக் கொண்டிருக்கிருர்கள்? சிங்களவர்களுக்குள்ளாகவே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இருக்கிருர்களே அவர்களை இவர்கள் எப்படிநடத்துகிருர்கள் என்பது தெரியுமா? பழைய டெடிகமா தேர்தலில் தாழ்த்தப்பட்ட பிரதிநிதி போட்டியிட்ட சமயம், அவ்வகுப்பினர்கள நடத்தப்பட்ட முறையை இவர்கள் அறிவார்களா? வாய்ச்சர்க்கரையாகப் பேசுவார்கள். அவர்கள் எதிர்பார்த்திருப்பது தமிழர் வீழ்ச்சி. தாழ்த்தப்பட்டோர் மீட்சியல்ல. இந்த இரகசியத்தை உணரல் வேண்டும்.

தமிழ்க் காங்கிரஸுக்கு நாம் ஓர் எச்சரிக்கை செய்ய வேண்டியிருக்கிறது. தமிழர்களைச் சிங்களவர் பிரிக்கச் செய்து வரும் சூழ்ச்சியைத் தடுக்க வேண்டும். தாழ்த்தப்பட்டோர் முன்னேற்ற விஷயமாய் 5 வருஷத் திட்டம் போட வேண்டும். அதில் தாழ்த்தப்பட்டோரையும் சேர்த்துக்கொண்டு முன்னேற்ற வழியைத் தேட வேண்டும. இவர்களில் சிலர் யூ. என். பியைச் சேர்ந்து கொண்டிருக்கிருர்கள் என்பதுபற்றி கோபம் கூடாது. தங்களுடைய பரிதாப நிலையை எண்ணி, யார் உபகாரம் செய்கிறேன் என்று சொன்னுலும் செவி சாய்க்க வேண்டியவர்கள். ஆகவே, இந்தக் காரணத்தைக் காட்டிப் புறக்கணிக்காமல் எல்லோரையும் சகோதர உணர்ச்சியோடு சேர்த்துக் கட்டுப்பாடாக தமிழர் முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டும்.

### காபாலனை காணவில்லை

கொழும்பு, அக். 2

கொழும்பில் செப்டெம்பர் 3-ம் தேதி கப்பலை விட்டு வெளியேறிய எச். பி. காபாலன் என்பவரைக் கண்டுபிடிக்க இலங்கை முழுமையும் கடந்த மூன்று வாரகாலமாக போலிசார் தேடியுள்ளனர். ஆனுல் முயற்சி பலனளிக்கவில்லை. இவர் இலங்கையிலுள்ள சில நண்பர்களுடன் உள்நாட்டுப் பகுதிக்கு சென்றிருக்கக் கூடுமென்று நம்பப்படுகிறது. "ஸ்ட்ராத்டன்" என்னும் கப்பலில் செல்லவேண்டிய காபாலன் அக்கப்பல் புறப்பட்ட சில மணி நேரத்தின்பின் கப்பல் ஏஜண்டுகளிடம் வந்து வேறு கப்பலில் போவதாக அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அவர்களிடமிருந்து 5 பவுண் பெற்றுக்கொண்டாரென்றும் அதன் பின் அவர் காணப்படவில்லையென்றும் கூறப்படுகிறது.

# 'பழைய குருடியே கதவைத் திறவடி'

"ஹோ சகோதரர்களே! மஹா ஜனங்களே! இதோ எங்கள் ஸ்ரீ லங்காதேவியின் பொருட்டு நான் என் உயிரையும் தியாகஞ்செய்யச் சித்தமாகிவிட்டேன். நாட்டுக்கு நன்மை செய்தன்றி ஓயமாட்டேன். பாராளுமன்றத்துக்கு என்னையே உங்கள் பிரதிநிதியாக அனுப்புங்கள். நான் உங்கள் பிரதிநிதியாவேனுகில், உங்கள் குறையெல்லாம் தீர்த்து வைப்பேன். நாடு முழுதும் தேனுறு பாலாறு பெருகியோடச் செய்வேன். இலங்கையைப் பொன்னுலகாக்குவேன்" என்று 360 பேர் கங்கணம கட்டிக் கொண்டெழுந்தார்கள். நாட்டிலே ஒரு மாதம் ஒரே அமர்க்களமாயிருந்தது. ஒருவாறு 95 பேர் பிரதிநிதிகளாயினர். தேர்தல் விழாவும் ஓய்ந்தது.

உடனே ஆரம்பித்தது மந்திரி சபைப் பித்தம். 'பழைய குருடி கதவைத்திறவடி' என்ற பிரகாரம், கவர்னர் பழைய மூப்பரையே தம்மிடம் அழைப்பித்து, "எண்ணிக்கையில் மிக்க யூ. என். பீத தலைவ! உன்னையே பிரதம மந்திரியாக்கினேன். மேலே உன் காரியத்தை ஆரம்பிப்பாயாக. சர்வ மங்களானி பவந்து!" என்று பிரதமராக்கி ஆசீர்வதித்தார். பத்திரிகைகள் கூரை மேலேறிக் கொக்கரித்தன சில; ஓலமிட்டன சில; புத்திமதி இடித்துரைத்தன சில; விதண்டாவாதம் பேசின சில; மிடுக்குற்றன சில; துடித்தெழுந்தன சில. ஆனுல் மூப்பருக்கோ உள்ளத்தைப் போலவே செவியும் இரும்பாகவோலஇருந்துவிட்டது. ஏற்கெனவே தாம் முடிவு செய்து கொண்ட திட்டத்தின்படி அவர் தமது மந்திரிசபையை அமைக்க முற்படலானுர்.

நாட்டு நன்மைக்கே தங்கள் உயிரையும் அர்ப்பணஞ்செய்யச் சித்தமாகிப் புறப்பட்ட தேச ஊழியர்கள் சிலர்,- விசேஷமாக பெரும்பான்மைக் கட்சியினர்) - தேர்தலிலே சித்தியடைந்து பாராளுமன்றத்தினுள்ளே நுழைந்ததும், உடனே "தேச ஊழியமாவது பாராளுதலே" என்னும் "ஆளுகிற" உணர்ச்சி ஒன்றே தலைக்கேறப் பெற்றுக்கொண்டனர். அந்தப் பித்தம் ஆளைச் சும்மா விடுமா? "பாராளுதற்கல்லவா நாம் பாராளுமன்றம் புகுந்தது?" என்று மீசை முறுக்கினர் சிலர். "இன்ன மந்திரிப்பதவி எனக்கே இருக்கட்டும்" என்று எச்சரித்தனர் சிலர். "என்னையும் ஒரு மந்திரியாக்காவிட்டால்

## புதிய பாராளுமன்ற ஆட்சியில் பெரும்பான்மையோர் வகுப்புவாதம்

### ஒன்றுக்கு இரண்டாகவே முறுக்கேறியிருக்கிறது

### 'சிங்களம்' என்ருல் தேசீயமாம்! 'தமிழ்' என்ருல் வகுப்புவாதமாம்

## இன்றைய இலங்கையின் அலங்கோலமான அரசியல் நிலைமை

("வநஜன்")

இதோ உன் கட்சியை விட்டு விலகிவிடுவேன்" என்று பயமுறுத்தினர் சிலர். "நானும் ஒருவனிருக்கிறேன் என்பது ஞாபகமிருக்கட்டும். இல்லாவிட்டால் என்னுடன் நாலு பேர் கட்சியைவிட்டு வெளியேறத் தயார்" என்று மெதுவாக ஞாபகமூட்டினர் சிலர்! இந்த உரிமைகளைப் பாராட்டாவிட்டால் இவர்கள் அந்தக் கட்சியிலிருந்துதான் என்ன பிரயோசனம்? பாவம். பிரதமர் பாடு சற்றே திண்டாட்டமாகப்பார்த்தது. தன் கட்சியிலுள்ளவர்களையுமோ கைவிடலாகாது. அந்தப் பதவிக்குமோ தகுந்தவர்களைப் பொறுக்கி எடுக்கவேண்டும். சூழ்ந்தை குட்டிகளையும் உற்ருறவினரையும் தழுவிய நண்பரையும் ஒரு கண் பார்த்துக்கொள்ள வேண்டும். "சிங்களம்" என்னும் சொல்லுக்கு "இலங்கை" அல்லது "தேசீயம்" என்பதுதான் உண்மையான கருத்து என்பதை "விரிந்த மனப்பான்மையுடைய (சிங்கள) தேசாபிமானிகளது" மனத்திலிருந்து அகலாதபடியும் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனுல் "தமிழ்' என்ருல் அப்படியல்ல. அது வகுப்புவாதம். ஆனபடியால் "பாராளுதற்கு," தமிழ் காங்கிரஸினுடைய உதவியைக் கோரவே கூடாது. இந்தியனோ இன்னும் 'பாடம் படிக்க" வேண்டியிருக்கிறது. நாட்டிலே (சிங்களவருக்கு முந்தியே) ஆயிரக்கணக்கான வருஷமாகக் குடியிருந்து வருகிற தமிழனை இலேசாக ஒதுக்கிவிட முடியாது. உலகத்துக்கும் ஒரு வார்த்தை அழுது தொலைக்க வேண்டுமே ஆனுல் இதற்குத் தமிழர் இரண்டொருவராவது அகப்படாமலா போய் விடுவர். இந்த நிலையிலே எப்படியோ சமாளித்துதான் ஆகவேண்டும். ஆகவே தனதாற்றலிலே நம்பிக்கைமிகுந்த பிரதமர் துணிச்சலுடன் அமைத்தாரே அமைத்தார் மந்திரி சபை.

எப்படி அமைத்தார்? அதிலே தான் விசேஷமுண்டு. டொனமூர் திட்டத்தின்படி நடந்து வந்த அரசாங்க சபையிலே எத்தனை மந்திரிமார் இருந்தனர்? ஏழு(7) அப்போது ஏழென்ருல் இப்போது போடு பதினலு (14) உலகத்திலே உள்ளதெல்லாம் பெருகுமிக்காலத்திலே மந்திரிமார் ஏன் பெருகக்கூடாது? "மகனே இப்படி வாடா, தந்தையின் கருமத்தைப் பிள்ளை பார்க்காவிட்டால்வேறு யார்தான் பார்ப்பார்? கமம் புலம் எல்லாம் இதோ உன் கையிற் கொடுத்தேன். சமர்த்தாயிரு. கொழுத்த சம்பளம் வரும். அண்ணே, தம்பீ, தோளா, எல்லோரும் இப்படி வாருங்கள். இந்தச் சல்லிப் பெட்டி [பணப்பெட்டி]யை நீ வைத்திரு. [சல்லிப் பெட்டி-ஓட்டைப் பெட்டி] உங்களொருவரையும் கைவிடமாட்டேன். நீங்களும் ஒருவராவது என்னை விட்டுப் போகவேண்டாம். வேண்டுமானுல் உங்களுக்குத் துணையாக எதேச்சை சுயேச்சையாய்த் திரிகிறவர்களிலும் சிலரை உங்களோடு கட்டிவிடுகிறேன். ஒரு கரம் [மந்திரிப்பதவியிலே கட்டுப்பட்டால் பிறகு அவர்கள் அவிழ்த்துக்கொண்டோட மாட்டார்கள்." சபாஷ். பதினலுபேர்கொண்ட மந்திரி சபை யொன்று சமைத்தாயிற்று. அப்படா! சற்றே இந்தச் சாய்மனைக் கதிரையிலே சாய்ந்திருக்க எண்ணினர் பிரதமர். "ஓஹோ அப்படியோ காரியம்? இந்த யூ. என். பியிலே மற்றவர்கள் நாங்களும் இருக்கிறது ஞாபகமில்லையோ?" என்று சில உறுமல் கேட்டது. "போடு ஒவ்வொரு மந்திரிக்கும் ஒவ்வொரு பார்லிமெண்டரி செக்ரட்டரி"-என்ருர் பிரதமர். சரி அதுவுமாயிற்று.

என்ன ஸ்ரீமான் பொதுஜனம் ஏதோ யோசிக்கிறீர்? இவர்களுடைய சம்பள வகையருக்களைப்பற்றி நினைக்கிறீரோ? உண்மையை உமக்குச் சொன்னுலென்ன. சம்பள விஷயத்திலே குறைசொல்லுதற்கு எள்ளளவேனும் இடங்கொடாமல் எல்லாம் செவ்வனே செய்துவைப்பார் பிரதமர் ஆட்சியின் பளுவைச் சுமக்க முடியாத நாடும் ஒரு நாடாகுமா? நாட்டின் நன்மைக்காகவல்லவா இத்தனை பேரும் கங்கணங் கட்டிக்கொண்டு பாராளுமன்றத்தினுள்ளே புகுந்தவர்கள்? ஆனபடியால் நாடு பட்டினி கிடந்தாகிலும் அவர்களை இரட்சிக்கத்தானே வேண்டும்!

இது தேச ஊழியரின் பாரம். இன்னும் எத்தனையோ வர ஆபத்தம். ஒவ்வொரு மந்திரிக்கும் ஒவ்வொரு (ஸிவில் ஸர்வீஸ) நிரந்தர செக்ரட்டரி ஒவ்வொரு ப்ரைவேட் செக்ரட்டரி, இதற்கேற்ற குமாஸ்தாப் படைகள், சிப்பந்திப் படைகள் என்றெல்லாம் தேவையல்லவா?

ஸோல்பரித் திட்டத்தின்படி ஆட்சியின் பொறுப்பு முழுதும் பிரதமர் கையிலுள்ளதாம். அதற்கேற்ற அதிகாரம் அவருக்குண்டாம். ஆனுல் அதைச் சர்வாதிகாரம் என்றெண்ணிவிட வேண்டாமாம். எனினும் எந்தப் பிரச்னையிலும் அவருடைய சகாக்களுடைய அபிப்பிராயமே அவரது தீர்மானங்களை உருவாக்குமானுலும் கடைசியில் அவர் வார்த்தையே தீர்ப்பான வார்த்தையாகுமாம். (அதாவது அவரிட்டதே சட்டம்?) இப்படிச் சொல்லுகிறது போன சனிக்கிழமை (27-9-47) வெளிவந்த டெயிலி நியூஸ் ஆசிரியர் கட்டுரை "சர்வாதிகாரம்" அல்லவாம். ஆனுல் எதிலும் ஈற்றிலே அவர் வார்த்தையே தீர்ப்பான வார்த்தையாம் மன்றத்திலிருந்து வார்த்தை புறப்பட இன்னும் நாளிருக்கிறது. இப்பொழுது அமைப்புச் செயல் நடக்கிறது. முதற் செயல் "ஒன்றுக்கு நாலாய்" ஆரம்பித்திருக்கிறது. மற்றவையும் அப்படித்தானே வரும். வரட்டும் பார்ப்போம்.

## மேற்குப் பஞ்சாப்பில் நிர்வாகம் சீர்குலைவு

### காந்திஜியுடன் லீக் தலைவர்கள் பேட்டி

புதுடில்லி, செப். 28

''நன்ருக ஆட்சி செய்தால் செய்யவும்; இல்லையேல் வெளியேறவும்" என்ற புத்திமதியை லாகூர் ஸிவில்அண்ட மிலிட்டரி கெஜட் 23-ம் தேதியன்று பாக்கிஸ்தான் சர்க்காருக்கு அளித்திருக்கிறது. 'மந்திரிகள் நிர்வாகத்தைநடத்தவில்லை. குண்டாக்களும் போலிஸாரும் தான் ஆட்சிபுரிகின்றனர்' என்று அப்பத்திரிகை எழுதியிருக்கிறது.

"ஆட்சி செய், அல்லது—" என்ற தலைப்பில் அப்பத்திரிகை எழுதியுள்ள முழு விவரமாவது:-

மேற்கு பஞ்சாப்பில் சர்க்கார் தன் நிர்வாகத்திறமையால் நிலைமையை சீர்படுத்தும் என்று எதிர்பார்ததோம்; ஆனுல் ஏமாந்தோம். இம்மந்திரி சபை ஏற்பட்டு 5 மாதத்திற்கு மேலாகிறது. ஒவ்வொரு இலாகாவிலும் க்ஷீணிப்பு ஏற்பட்டிருக்கிறது. நிலைமையைச் சமாளிப்பவர்களாக மந்திரிகள் காணப்படவில்லை.

#### நிர்வாகம் முறிவு!

அநேகமாக நிர்வாகம் முறிந்துவிட்ட இச்சமயத்தில் அனுபவமில்லாத இந்த மந்திரிகளால் இன்னும் ஆபத்தே தான் ஏற்படும்.

இப்பொழுது இம்மாகாணத்தை ஸ்ரீ மம்தாத் இப்திகாருத்தீன் ஆட்சிபுரியவில்லை. போலிஸ் கான்ஸ்டபிள்களும் குண்டாக்களும்தான் ஆட்சிபுரிகிருர்கள். சர்க்கார் இலாகாக்களில் ஒழுங்கு, கட்டுப்பாடு ஒன்றையும காணேம். அனுபவமின்மை, வேலை தெரியாத கொடுமை இதற்கும், லஞ்சம் ஊழல் இவைகளுக்குமிடையே ஜனங்கள் அவதிப்படுகிருர்கள்.

இந்த சர்க்காருக்கு நாம் அளிக்கும் புத்திமதி, நன்ருக ஆட்சிபுரியுங்கள் அல்லது வெளியேறுங்கள் என்பதே.

(இந்தப் பத்திரிகை முஸ்லிம் லீகிற்கு விரோதமான பத்திரிகை என்று சொல்வதற்கில்லை. இதிலிருந்து லீக் தலைவர்கள் தங்கள் ஆட்களான வெறியர்கள் விஷயத்தில் தலையிடவே பயப்படுகிருர்கள் என்று தெரிகிறது.)

#### காந்திஜியுடன் முஸ்லிம் லீக் தலைவர்கள் பேட்டி

புதுடில்லி, செப். 28

ஐ மா. முஸ்லிம் லீக் தலைவர் முகம்மது இஸ்மாயில் கானும், மற்ற முஸலிம் பிரமுகர்களும் இன்று காந்திஜியைப் பேட்டி கண்டனர். டொமினியன்களிலுள்ள மைனுரிட்டிகளின் கடமைகள் பற்றியும், உரிமைகள் பற்றியும் அவர்கள் பேசியதாகத் தெரிகிறது.

மவுலான ஆஸாத்தும், சஹரவர்தியும் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

இந்திய டொமினியனில் உள்ள முஸலிம்கள் இந்தியாவிடம் விசுவாசமாக நடந்து கொள்ளவேண்டுமென்று கோரியும், இந்திய பிரஜைகளுக்குள்ள எல்லா உரிமைகளும் அவர்களுக்கு அளிக்கப்படும் என்று உறுதியளித்தும் கூடிய சீக்கிரத்தில் ஒரு அறிக்கை வெளியாகுமென்று தெரிகிறது

இதில் எல்லா வகுப்பைச் சேர்ந்த தலைவர்களும் கையெழுத்திட்டு வெளியிடுவார்கள் என்று தோன்றுகிறது.

#### முஸ்லிம்களுக்கு ஐ. மா. லீக் தலைவர் புத்திமதி

லக்ஷ்மணபுரி, செப். 28

ஐக்கிய மாகாண சட்டசபை முஸ்லிம் லீக் கட்சி உப தலைவர் ஸ்ரீ லாரி இன்று விடுத்துள்ள அறிக்கையில் கூறுவதாவது:-

இந்திய யூனியனில் உள்ள முஸ்லிம்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும், எந்த விதமான கொள்கையை அனுஷ்டிக்க வேண்டுமென்பது பற்றியும் ஆலோசனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. தேசப் பிரிவினைக்குப் பிறகு அகில இந்திய முஸ்லிம் லீக கவுன்ஸில் கூடி ஷ விஷயத்தில் ஒரு வழி காட்டவில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு என்பதை அறிவேன். எனவே இந்த நிலையில இந்திய யூனியனில் உள்ள லீக் கவுன்ஸில் அங்கத்தினர்களும் அ. நி. சபை லீக் அங்கத்தினர்களும் மாகாண சட்ட சபை லீக அங்கத்தினரும் கூடி ஒரு மகாநாடு நடத்த வேண்டும். இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஸ்ரீ சஹ்ரவர்தி நவாப் முகம்மது இஸ்மாயில் கான், சவுத்ரி காலிக்குஸ்ஸமான் முதலியவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அமைதியை நிலைநாட்டியே தீருவதென்று பிரதமர் நேரு தீர்மானித்திருக்கிருர். இதற்கு மகான் காந்தியும் ஆதரவளிக்கிருர். எல்லா முஸலிம்களும் தன்னம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும், இந்திய சர்க்காரிடம் நம்பிக்கை வைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

#### ஷேக் அப்துல்லா விடுதலை

புதுடில்லி, செப். 29

காஷ்மீர், ஜம்மு தேசிய மகாநாட்டுத் தலைவர் ஷேக் முகம்மத் அப்துல்லாவும் தேசிய மகாநாட்டைச் சேர்ந்த இதர அரசியல் கைதிகளும் இன்று காலை நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டதாகஇங்குதெரிகிறது

காஷ்மீர் சர்க்கார் சில கைதிகள் மீதுள்ள வழக்குகளை வாபஸ வாங்கிக் கொண்டு விட்டதாகவும், சில பேர் மீதுள்ள கைது செய்யும் வாரண்டுகளையும் வெளியேற்ற உத்தரவுகளையும் ரத்துச் செய்துவிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

### ஒரே சூலில் எட்டு ஆண் குழந்தைகள்

#### சீனப் பெண் பெற்றெடுத்தாள்

ஷாங்கை, செப். 30

ஷாஙகையிலிருந்துசுமார் 120 மைல் தூரத்திலுள்ள இஷிங் என்னுமிடத்திலுள்ள வரி வசூலிக்கும் இலாகா டைரக்டர் ஷாங் ஹூபிங என்பவர் அப்பகுதியில் ஒரு பெண்ணுக்கு எட்டு ஆண் குழந்தைகள் பிறந்தனவென்றும் அவற்றில் ஒரு குழந்தை இறந்துவிட்டதென்றும் மற்றும் ஏழு குழந்தைகளும் தாயும் சுகமே இருக்கின்றனரென்றும் அறிவிக்கின்ருர். ஸ்ரீமதி ஹூாங்பிங வெய் என்பவரே அக் குழந்தைகளைப் பெற்றுள்ளாரென்றுஅவர் தெரிவிக்கின்ருர். [ராய்ட்டர்]

## குமாரி ருக்மணி மீது வழக்கு

### "வீடு கட்டுப்பாடு" விதி மீறவில்லையெனத் தீர்ப்பு

சென்னை, செப். 29

மாம்பலம் வியாஸராவ் தெரு 10-ம் நம்பர் வீடு காலியானதை சட்டப்படி கலெக்டருக்கு தெரிவிக்கவில்லை யென்று சினிமா நடிகை குமாரி ருக்மணி மீதும் அவருடைய தாயார் ஜானகி அம்மாள் மீதும் கொண்டு வரப்பட்ட வழக்கை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் இன்று தள்ளுபடி செய்தார்.

ஜனவரி 10-ம் தேதி வீடு காலியானபோது ஜாயாவில் தாங்கள் இருந்ததாகவும், உடனே சென்னை கலெக்டருக்கு எழுதி, தபால் அத்தாட்சி பெற்றதாகவும் எதிரிகள் கூறினர். கல்கத்தா கலகம் தோன்றியதால் கடிதம் கிடைக்காமற் போயிருக்கலாமென்று கூறினுர்.

பிறகு பெப்ரவரி 15-ம் தேதி வேெருருவருக்கு வீட்டை குடக்கூலிக்கு விட்டதாகவும் கூறினுர்.

இச்சமாச்சாரத்தில் ரெவின்யு இன்ஸபெக்டர் குமாரி ருக்மணிக்கு கல்கத்தாவுக்கு அனுப்பிய ரிஜிஸ்டர் கடிதம் போய்ச் சேராது திரும்பிவந்துவிட்டது.

இச் சம்பவத் தேதிக்குப் பிறகுதான் வீடு காலியாவதை ரிஜிஸ்டர்மூலம் அல்லது நேரில் தெரிவிக்கவேண்டுமென்ற விதி பிறப்பிக்கப்பட்டது. இதையும் தகவல் கடிதம் தபாலில் போடப்பட்டதையும் உத்தேசித்துஇருவரையும் மாஜிஸ்திரேட் விடுதலை செய்தார்.

### சர்க்கார் தகவல்கள் இனி தாய்ப் பாஷையிலேயே தரப்படும்

#### சர்க்கார் வேலை ஜனஙகளுக்குத் தெரியச் செய்யுமாறு யோசனை

சென்னை, செப். 29

தேச நிர்மாண இலாகா அதிகாரிகளின் கால் வருஷ கூட்டத்தை இன்று மராமத்து மந்திரி எம். பக்தவத்சல முதலியார் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் சர்க்கார் செய்துவரும் வேலைகள் பாமர மக்கள் அறிய பிரசுரங்கள், ரேடியோ, சினிமா மற்றுமிதர சாதனங்கள் மூலம் முயல வேண்டுமென்று சொன்னுர்.

#### சர்க்கார் தகவல் தாய்ப் பாஷையில்

இம் மாகாணத்தின் நான்கு பாஷைகளிலும் செய்திகள் இனி தருவதற்கு ஏற்பாடு செய்வதாகவும், டில்லி தலைமை ரேடியோ ஸதலத்தின் மூலமாகவும், இங்குள்ள ரேடியோ ஸதலங்கள் மூலமாகவும் சர்க்கார் வேலைமுறைகள் மக்களுக்கு அறிவிக்கப்படுமென்றும் சொன்னுர்.

### புதுக்கோட்டைக்கு பூரண பொறுப்பாட்சி

#### மகாராஜா பிரகடனம்

புதுக்கோட்டை, செப். 29

புதுக்கோட்டை மகாராஜா நேற்று ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். அதில் புதுக்கோட்டை சமஸதானத்திற்கு பூரண பொறுப்பாட்சி வழங்குவதாகத் தெரிவித்திருக்கிருர். அதன் விவரம் வருமாறு:- 20 அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு அரசியல் நிர்ணய சபையை திவான் கூட்டுவார். இந்த 20 அங்கத்தவர்களில் 16 பேர்கள் வயது வந்தவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மற்ற நால்வரில் திவான் ஒருவர். பொதுஜன மந்திரிகள் 2 பேர். சர்க்கார் நியமன மெம்பர் ஒருவர் ஒருவர் திவான் அரசியல நிர்ணய சபையின் தலைவராக இருப்பார் இந்த அரசியல் நிர்ணய சபை அரசியலை வகுக்கும். அடுத்த வருட கடைசிக்குள் புதிய அரசியலமைப்பு தயாராய் விடவேண்டுமென்று பிரகடனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உயிருள்ளவரை உழைப்பேன்'

## ஓய்வு என்பது ஒருவகை மரணமே!

## சத்தியத்தையே அகிம்சையாக வழி படுகிறேன்

## ஹரிஜன் பத்திரிகையும் மகாத்மா காந்தியும்

ஆமதாபாத், செப். 29

"என் கடமை" என்ற தலைப்பில் "ஹரிஜன்" பத்திரிகையில் பின்வருமாறு காந்திஜி எழுதுகிருர்:-

இந்த தலைப்பு, "ஹரிஜன்" பத்திரிகைகளை நடத்துவது பற்றி என் கடமை என்ன என்பதை மட்டுமே குறிக்கிறது ஹரிஜன் பத்திரிகை நடந்துவர வேண்டுமா என்று சில தினங்களுக்கு முன்னர் நான் வெளியிட்ட கேள்விக்கு பலரிடமிருந்து பதில்கள் வந்திருக்கின்றன. பத்திரிகை நடந்துவர வேண்டியதே என்பதுதான் பெரும்பான்மையோரது கருத்து. ஒரு சிலர் மட்டுமே பத்திரிகையை நிறுத்துவதற்கு சம்மதிக்கிருர்கள்.

தற்காலம் இருந்து வரும் பல பிரச்னைகளில் ஜனங்கள் என் கருத்தைக் தெரிந்து கொள்ள விரும்புகிருர்கள் என்பதுதான் பெரும்பான்மையோர் கூறும் காரணம். நான் செத்துப் போய் விட்டால் பிறகு இந்தப் பத்திரிகைகள் வேண்டியதில்லை என்பதே இதன் கருத்து.

### மூன்று வகையான சாவுகள்

எனது மரணம் மூன்று விதமாக ஏற்படக்கூடும்:-

[1] இயற்கையான காரணங்களால் என் உடல் கரைந்து போவது அதாவது உடல் நிமித்தமான காரணங்களால் ஏற்படும் மரணம்.

[2] கண்மட்டும் இறந்திருந்து மனம் செயலற்றுப் போவது.

[3] உடலும் மனதும் வேலை செய்யும் சக்தியுடன் இருப்பினும் நான் பொதுக் காரியங்களிலிருந்து விலகுவது.

இம்மூன்றில் முதலாவதாக குறிப்பிட்டது எல்லாருக்கும் ஏற்படக்கூடியதே. ஆகையால் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை.

இரண்டாவதாக குறிப்பிட்ட மரணம் விரும்பத்தக்கதல்ல. யாருக்கும் அது ஏற்படக்கூடாது. அவ்வாறு வாழ்வது பூமிக்கு பாரமேயாகும். அப்படிப்பட்ட ஜீவனற்ற வாழ்க்கையை நான் விரும்பமாட்டேன்.

மூன்ருவதாக குறிப்பிட்ட நிலைமையை சற்று கவனத்துடன் பரிசீலனை செய்யவேண்டியதே. இப்போதே நான் அன்ருட விவகாரங்களிலிருந்து விலகி ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டியதே என்று சிலர் சொல்லுகிருர்கள். ஆகஸ்ட் 15-ம் தேதியன்று இந்தியாவில் புதிய சகாப்தம் ஆரம்பமாயிருக்கிறது இந்த புதிய சகாப்தத்தில் எனக்கு இடமில்லை என்று இவர்கள் கூறுகிருர்கள்.

இவ்வாறு சொல்பவர்கள் சிறிது கோபத்துடன் எழுதியிருப்பதுபோல எனக்குத் தெரிகிறது.

கோபத்தால் தூண்டப்படுபவர்களின் ஆலோசனைக்கு நான் அதிக கௌரவம் அளிக்க முடியாது. இவ்வாறு யோசனை கூறுபவர்களின் தொகை மிகவும் குறைவாகவே இருக்கிறது

### 'என் கடன் பணி செய்து கிடப்பதே"

இவ்விஷயத்தில் நான் சுயமாகவே ஒரு முடிவுக்கு வரவேண்டியதுதான். "ஹரிஜன்" பத்திரிகைகள் ஒரு "டிரஸ்ட்" ஸ்தாபனத்தால் பிரசுரிக்கப்படுகின்றன. டிரஸ்டிகள் எப்போது தீர்மானித்தாலும் இந்தப்பத்திரிகைகளை நிறுத்த முடியும். அதற்கு அவர்களுக்கு பூரண அதிகாரம் இருக்கிறது. பத்திரிகைகளை நிறுத்த வேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை.

என் வாழ்நாள் முழுவதும் சுறுசுறுப்பான பொது வாழ்விலேயே செலவிடப்பட வேண்டுமென்பதுதான் விதியின் கட்டளையென்று கருதலாம் சும்மா இருப்பதின் மூலமே பொங்கு செயலாற்றுதல் என்று வர்ணிக்கப்படும் மகத்தான யோகநிலையை நான் எய்தவில்லை. ஆகையால் உயிர் இருக்கும் வரையில், கடைசி மூச்சு இருக்கும் வரையில். நாம் சேவை புரிந்தே தீரவேண்டும். ஒரு துறையிலிருந்து ஒதுங்கி மற்றொரு துறையில் வேலை செய்வது என்று பாகுபாடு செய்வதும் சாத்தியமல்ல.

ஏனென்ருல் எல்லாவற்றுக்கும் மூலாதாரமானது சத்தியம்; "சத்தியம்" என்பதையே நான் 'அஹிம்சை" என்ற வடிவத்தில் காண்கிறேன் ஆகையால் "ஹரிஜன்" பத்திரிகைகள் இப்போதிருப்பது போலவே நடந்து வரவேண்டியதே இந்த ஒரு சங்கற்பத்துடன் இப்போது நிறுத்திக்கொள்கிறேன்.

## இந்தோ-சீனவில் சர்வதேச விமான சர்வீஸ் மகாநாடு

சைகோன், செப். 30

சர்வதேச விமான சர்வீஸ் மகாநாடு நடந்தபோது பிரஞ்சு இந்தோ-சீனக்கில் விமான பாதுகாப்பு நடவடிக்கைகள்பற்றி ஆலோசிக்கப்பட்டன. கிழக்காசியா நாடுகளில் விமான சர்வீஸ் பிரச்னைகளைப்பற்றி ஆலோசிக்கவே இம்மகாநாடு நடைபெற்றது. (ராய்ட்டர்)

## ஐரோப்பிய நாடுகளில் டாலர் நெருக்கடி

### 1948-ம் வருட தண்டு விழும் டாலர் புள்ளி விபரங்கள்

லண்டன், செப். 30

ஐரோப்பிய பொருளாதார புனர் நிர்மாணக் கமிட்டி பொது அறிக்கையில் 1948-ம் வருடத்தில் டாலர் பிரச்னை சம்பந்தமாக 9 நாடுகளின் புள்ளி விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் 1948-ம் அண்டில் பிரிட்டனுக்கு 2,630 000,000 டாலர் தண்டுவிழுமென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது தண்டு விழும் டாலர் பற்றிய உத்தேசக் கணக்கில் பிரிட்டன் தான் அதிகமான நஷ்டத்துக்குள்ளாவதாகவும், அடுத்தபடியாக பிரான்ஸுக்கு 1,760,000 000 டாலர் துண்டுவிழுவதாகவும், மூன்ருவதாக அமெரிக்க-அங்கிலேய அதிகாரத்திலுள்ள ஜெர்மன் பிரதேசங்களுக்கு 1,150,000,000 தண்டு விழுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவைக்குப் பின்னுள்ள பல நாடுகளிலும் துண்டு விழும் டாலர் தொகைபற்றிய விபரம் பின்வருமாறு:-

பெல்ஜியம் 320,000,000 டாலர்கள்; டென்மார்க் 210,000,000; டாலர்கள்; பிரஞ்சு அதிகாரத்திலுள்ள ஜெர்மனி 130,000,000 டாலர்கள்; கிரீஸ் 510,000,000 டாலர்கள்; இத்தாலி 930,000,000 டாலர்கள்; நெதர்லந்து 630,000,000 டாலர்கள்; நோர்வே 50,000,000 டாலர்கள்; சுவீடன் 150,000,000 டாலர்கள். (ராய்ட்டர்)

## பிரிட்டிஷ் பார்லிமெண்ட் நல்லெண்ணத் தூதுக் கோஷ்டி

### சீன புறப்பட்டுள்ளது

லண்டன், செப். 30

சீனவுக்குச் செல்லும் பார்லிமெண்ட் நல்லெண்ணத் தூதுக் கோஷ்டி பிரிட்டனில் இருந்து சீனவுக்குப் புறப்பட்டுள்ளது இத் தூதுக் கோஷ்டி சுமார் ஒரு மாத காலம் சீனவில் தங்கி நான்கிங், ஷாங்கை, முக்டன் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்யுமென்றும் சிங்கப்பூருக்கும் இத் தூதுக் கோஷ்டி செல்லுமென்றும் கூறப்படுகிறது.

## சர்க்காருடன் பூர்ணமாக ஒத்துழைத்து பொருள் உற்பத்தியை பெருக்குக

### டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் பிரசங்கம்

### "பொருளாதார அரசியல் அதிகாரங்கள் ஒரு சிலர் கையில் சிக்கக்கூடாது"

பம்பாய், செப், 29

"இப்பொழுது சூழ்ந்துள்ள நெருக்கடிகள் நமது மத்ய சர்க்காருக்கு "சவால்" கூறுவதாக இருக்கின்றன. முதலாளிகள் பணம் திரட்டுவதற்கோ அல்லது தொழிலாளர்கள் வெளியேறுவதற்கோ, இதுவா சமயம்?" என்று காசி ஹிந்து சர்வ கலாசாலை உப-அத்தியட்சகர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் பம்பாய் சர்வ கலா சாலையில் பொருளாதார வகுப்பின் வெள்ளி விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். நீதிபதி ஸ்ரீ எம் சி சாக்ளா கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

"யுத்தகாலத்தில் இருப்பது போன்ற நெருக்கடிகள் இப்போது ஏற்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்காருடன், இச்சமயத்தில் நாம் பூர்ணமாக ஒத்துழைக்க வேண்டும். பொருளுற்பத்தியை அதிகரிக்க எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும். இப்போது ஏதாவது அபாயம் நேருமானல், சர்க்காருடன் பூர்ணமாக ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்று உறுதி கூறக் கூடிய நிலைமையில் நாம் இருக்க வேண்டும்" என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் மேலும் கூறினர்.

### சுயநலத்திலிருந்து விடுதலை வேண்டும்

அவர் மேலும் கூறியதாவது:- சுயநலத்திலிருந்து விடுதலையாவது தான் நான்கு சுதந்திரத்திற்குள்ளும் தலைசிறந்த ஆகும். பொருளாதார அரசியல் அதிகாரங்கள் எல்லாம் ஒரு சிலர் கையிலேயே சிக்கிவிடுமானல், ஜனநாயகம் ஒழுங்காக வேலைசெய்ய முடியாது. தனக்காக அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ளும் நோக்கமில்லாமல், மக்கள் சேர்ந்து ஏற்படுத்துகிற அரசாங்கத்தைத்தான் ஜனநாயக சர்க்கார் என்று கருதுகிறோம். மற்ற எல்லா அரசியல் அமைப்புகளையும் விட, ஜனநாயக முறை தான் மனித ஜாதியின் பண்புகளை அதிகமதிப்பதாக இருக்கிறது

அபிப்பிராயங்களை பரிமாறிக் கொள்ளவும், விவாதிக்கவும், கலந்தாலோசிக்கவும், பரஸ்பரம் விட்டுக் கொடுத்துக் கொள்ளவும் ஜனநாயகத்தில் இடமுண்டு. ஜனநாயகம் திறம்பட வேலை செய்ய வேண்டுமானல், தனிப்பட்ட மக்கள் விவேகமுடையவர்களாக இருப்பது அவசியமாகும்.

பொருளாதார பிரச்னைகளைக் குறிப்பிட்டு, டாக்டர் ராதாகிருஷ்ணன் மேலும் பேசியதாவது:- பணப்பெருக்கம், லஞ்சம், கள்ள மார்கெட், தொழில் தகராறுகள் ஆகியவைகளை ஒழித்துக்கட்டுவது, திறமை மிக்க சர்க்காருக்கு பெரிய வேலையல்ல. பொருள்களை பதுக்கும் மனேபாவத்தை ஒழிக்க வேண்டும்.

அரசியல் சுதந்திரம் பெற்று விட்டோம். ஆனல் அது பிரத்தியட்சமாக தெரிவதாய் இல்லை இப்போதைய நெருக்கடிகள் நமது சர்க்காருக்கு "சவால்" கூறுவதாக இருக்கின்றன. இப்பொழுது ஒவ்வொருவரும் சர்க்காருடன் பூர்ணமாக ஒத்துழைக்க முன்வரவேண்டும்.

## தேர்தலில் வாக்களித்தோர் புள்ளி விபரப் பித்தலாட்டம்

### தமிழ்க் காங்கிரஸ் வெற்றியை இழிவு படுத்த எத்தனம்

சென்ற செப்டம்பர் மீ 24-ம் தேதி வெளிவந்த "டெயிலி நியூஸ்" பத்திரிகையின் முகப்பில் பிரசுரிக்கப்பட்டுள்ள, காங்கிரசும் மந்திரி சபையும் என்ற விஷயத்தை வாசித்த சகல சிங்கள வாசகர்களுக்கும் அது பெரும் வேடிக்கையாக இருந்தது. தமிழ்க் காங்கிரஸின் வெற்றியை அலசி ஆராய்ந்து, டெயிலி நியூஸ் அரசியல் நிருபரால் எழுதப்பட்ட அவ்விஷயத்திலிருந்து நாம் கீழே எடுத்துக் காட்டும் பகுதிகளையும் எமது ஆராய்ச்சி முடிவுகளையும் ஒத்து நோக்கும் தங்கள் வாசகர்கள், அவ்வரசியல் நிருபரின் குதர்க்கத்தை நன்கு காண்பர்.

வாக்களிக்க முன்வராதவர்கள் உட்பட, 284,621 வாக்காளர்களைக்கொண்ட தேர்தல் தொகுதிகளிலிருந்து, தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர்கள் ஆக 82,499 வாக்குகளையே பெற்றனர் என்றும் அதனல் 202 122 வாக்காளர்கள் தமிழ்க் காங்கிரசை ஆதரிக்கவில்லை என்றும் அந்த அரசியல் நிருபர் குறிப்பிடுகிருர் இது வெறும் பயித்தியக்காரத்தனமான அபிப்பிராயமே தவிர வேறு என்னவாயிருக்கலாம்? டெயிலி நியூஸ் அரசியல் நிருபர் இந்த மடைமைத்தன மான குதர்க்க வார்த்தைகளை எழுதும் பொழுது, மதி மயங்கியிருந்திருக்க வேண்டும். அந்த விஷயத்தை பிரசுரத்திற்கு ஏற்ற ஆசிரியரும், உதவி ஆசிரியரும் அவ்வாறே புத்தியற்றுதான் இருந்திருக்க வேண்டும். அல்லது அப் பத்திரிகையின் முதலாளி வர்க்கத்தின் நிர்ப்பந்தத்தின் பேரில், அவ்வரசியல் நிருபர் நீதி நியாயமற்று அவ்வாறு எழுதியிருக்கக் கூடுமா?

டெயிலி நியூஸ் அரசியல் நிருபர் உபயோகித்த அளவு கருவியைக் கொண்டே, இத்தீவில யூ. என். பி. என்ற "அகில இலங்கைக் கட்சியின்" பலத்தை அளவிட்டுப் பார்ப்போம் டெயிலி நியூஸ் பத்திரிகைக்காரர்கள் பிரசுரித்த அதே இலக்கங்களையே நாமும் எடுத்துக்கொள்வோம். இலங்கை முழுவதிலும் பெறப்பட்ட 1,881,364 வாக்குகளில், யூ. என். பி. கட்சிக்குக் கிடைத்துள்ள வாக்குகள் ஆக 744,698. டெயிலி நியூஸ் அரசியல் நிருபர் தமிழ்க் காங்கிரஸிடம் கொண்ட மனப்பான்மையைவிட, யூ. என். பி. யிடம் மிக்க தாராளமான மனப்பான்மையுடன் பொது அறிவை உபயோகித்தால் 1 136 666 வாக்குகள் யூ. என். பி. க்கு எதிராகவே இருக்கின்றன. ஆகவே, யூ. என் பி காரர்களுக்குச் சார்பாக கேவலம் 744,698 வாக்குகளும், எதிராக 1,136 666 வாக்குகளும் கிடைத்துள்ளன என்பது வெளிப்படுகிறது.

டெயிலி நியூஸ் அரசியல் நிருபர் தமிழ்க் காங்கிரசிடம் காட்டிய மனப்பான்மையுடன் காமும் யூ. என். பி கட்சியை நோக்குவோமாயின் அக்கட்சிக்கு உள்ள எதிர்ப்பு மிக மிக அதிகமாகிறது. வாக்காளர்களின் கூடிய தொகை 3,420,536 வாக்குகள் தனிலும் அதிகப்பட்டதற்கு, ஒவ்வொன்றும் இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட தேர்தல் தொகுதிகள் நாலுக்குக் குறையாது இருந்ததே காரணமாகிறது. அவற்றுள் ஒன்ருய் அம்பலாங்கொடை பலப்பிட்டியாவில் ஒவ்வொருவரும் இரு வாக்குகளையுடைய 1,200 000 க்கு மேற்பட்ட வாக்காளர்களுள் 1 000,000 வாக்குகளுக்குக் குறைவாகவே பெறப்பட்டன. ஏனைய மூன்றும் வதுளை, பலாங்கொடை, கடுகண்ணுவா என்பன. ஒவ்வொருவரும் மூன்று வாக்குகள் பெற்ற 159,855 வாக்குகளும் உடைய மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட மத்திய கொழும்பில், ஆக 103,775 வாக்குகளே பெறப்பட்டன ஆகவே, உண்மையில் அளிக்கப்படாத வாக்குகள், வதுளை, பலாங்கொடை, கடுகண்ணுவா ஆகிய தொகுதிகளைவிட, அம்பலாங்கொடையில் குறைந்தது 1,000,000-ம் மத்திய கொழும்பில் 56,000-ம் உட்பட்டனவாகும். குறைந்த கணக்குப் படி. இதில் 3,000,000 வாக்குகள் ஆகின்றன. வாக்காளர்களின் கூடிய தொகையாகிய 3,420,536 உடன் இதைக் கூட்ட, மொத்தமாக ஏறக்குறைய 6,000,000 வாக்குகளில், ஆக 744,698 வாக்குகளே யூ. என். பி யின் சார்பாக அளிக்கப்பட்டிருக்கின்றன. இது பன்னிரண்டரை விகிதத்திற்கும் சிறிது குறைவாகவே காணப்படுகிறது. ஆகவே, எண்பத்தேழரை விகிதத்திற்கும் மேலான வாக்காளர்கள் யூ. என். பி. க்கு மாருகவே வாக்களித்திருக்கின்றனர்.

இது, பன்னிரண்டரை விகிதத்திற்குக் குறைவானவர்களே சோல்பரித் திட்டத்தை ஆதரிக்கிருர்கள் என்றும், எண்பத்தேழரை விகிதத்திற்கும் மேலானவர்கள் அதை எதிர்க்கிருர்கள் என்றும் காட்டிநிற்கிறது. இதுவே நாட்டின் அபிப்பிராயமாகும்.

டெயிலி நியூஸ், அரசியல் நிருபர் செய்ததுபோல நான் இதன் பெறுபேறுகளைக் கூருது தங்கள் வாசகர்களே அதை உணர்ந்துகொள்ளட்டும் என்று விட்டுவிடுகிறேன்.

"டீ. எஸ். சேந்தனுயக்க"

## "ஜார்ஜ் டவுனை" "சிதம்பரம் நகர்" என்று மாற்றுக

### போர்ட் டிரஸ்ட் தொழிலாளரின் கோரிக்கை

சென்னை ,செப். 28

காலஞ்சென்ற ஸ்ரீ வா. உ. சிதம்பரம் பிள்ளையின் ஞாபகார்த்தமாக சென்னையின் "ஜார்ஜ் டவுன்" என்ற டாகத்தை "சிதம்பர நகர்" என்று மாற்றி பெயரிடவேண்டுமென்ற தீர்மானம், சென்னை போர்ட் டிரஸ்ட் தொழிலாளர் யூனியன் ஜெனரல்பாடி கூட்டத்தில் செப்டம்பர் 24-ம் தேதியன்று, ஸ்ரீ ஷண்முகத்தினல் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேறிற்று.

ஸ்ரீ எம் பி சிவஞான கிராமணி இத் தீர்மானம மீது பேசினர்.

கூட்டத்துக்கு ஸ்ரீ ஜி. ராஜமன்னர் செட்டி தலைமை வகித்தார்.

## கூட்டத்தைக் கலைக்க முயன்றவருக்கு தண்டனை

லண்டன், செப். 30

பிரிட்டிஷ் மாஜி யுத்தவீரர் லீக்கின் கூட்டத்தில் இடையிட்டுக் குழப்ப முயற்சித்த ஒருவர் நன்னடத்தையுடன் நடக்கும்படி எச்சரிக்கப்பட்டதுடன் இரண்டு ஸ்டெர்லிங் கட்ட வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. மாஜி யுத்தவீரர் லீக்கில் பாஸிசத் தலைவர்கள் இருப்பதாகவும், பாஸிசம் வீழ்கவென்று கூறி கூட்டத்தைக் கலைக்க முயன்றதாகவும் பிரஸ்தாப நபர் மீது குற்றம் சாட்டப்பட்டது. (ராய்ட்டர்)


## துறைமுக தீ விபத்தில் 70 பேர் காயமடைந்தனர்

### 50 லட்சம் டாலர் நஷ்டம்

நியூயார்க், செப் 30

ஹட்ஸன் நதி துறைமுகத்தில் ஒரு பெரும் பகுதி தீப்பிடித்து எரிந்து விழுந்ததால் 70 நெருப்பணைக்கும் படையினர் காயமடைந்தனரென்றும் சுமார் 14 மணி நேரத்தின் பின்னரே நெருப்பு அணைக்க முடிந்ததென்றும் கூறப்படுகிறது. இங்கு ஏற்பட்டுள்ள சேதம் 50 லட்சம் டாலர் என்று உத்தேசிக்கப்படுகிறது (ராய்ட்டர்)

நவீன முறையில் தயார் செய்யப்பட்ட




சந்திரா பீடியை வாங்கி உபயோகியுங்கள்.

கட்டிட வேலைக்கு வேண்டிய எல்லா விதமான சாமான்களும் குறைந்த விலையில் கிடைக்கும் இடம்

செட்டிநாட் கார்ப்பொரேஷன் லிமிடட்

116/118 கெய்சர் வீதி, கொழும்பு.

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும் இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கிய வியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,

71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.

Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸ்தர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனேன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷ சகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சிலவா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுத்தர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுருநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முன்னேற்றக் கொள்கை வேண்டும்

### கமியூனிஸ்ட் கட்சியின் அறிக்கை

மாத்தறை, அக். 1

கமியூனிஸ்ட் கட்சியின் கூட்டமொன்று டாக்டர் விக்ரமசிங்காவின் இல்லத்தில் நடைபெற்றது. சுமார் 12 மணி நேரத்தின் முடிவில் இக் கட்சி விடுத்த அறிக்கையில் தி. சேனநாயக்காவின் சர்க்காரை பாராளுமன்றத்தினரும் மக்களும் ஆதரிக்கும் சர்க்காரென்று மதிக்க முடியாதென்றும், பொதுத்தேர்தலில் ஒரு கட்சியாவது சரியானபடி அதிகமான அபேட்சகர்களைப் பெறவில்லையென்றும் அதிகமான சுயேச்சை அபேட்சகர்கள் வெற்றி பெற்றிருப்பது இங்கு திடமான கட்சி எதுவும்இன்னும்சரியாக அமைக்கப்படவில்லை யென்பதைக் காட்டுவதாகவும் மக்கள் விரும்பும் ஆட்சிபற்றியும்கூறப்பட்டுள்ளது.

மக்களது ஆதரவுடனும், பாராளுமன்றத்தினரின் நம்பிக்கையுடனும் ஆரம்பிக்கப்பட்ட விரிவான மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்ட சர்க்காரே சுதந்திரப் போராட்டத்தை நடத்தமுடியுமென்றும் உண்மையில் தேசிய சர்க்காரை அமைக்க முன்னேற்றக் கட்சிகளும் இடதுசாரியினரும் சேர்ந்து விரிவான திட்டத்தின்படி நடக்க வேண்டுமென்றும் இந்த முன்னேற்றக்கட்சிகளுக்கும் இடதுசாரி கட்சிகளுக்கும இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமென்றும் அவர்களுடைய ஆக குறைந்த திட்டத்தில் பிரிட்டிஷ் படைகள் வெளியேற்றம், அரசியல் ஆதிக்கத்தை தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தல், ஜனநாயகரீதியற்ற சட்டங்களை வாபஸ்பெறுதல், சர்க்கார் உத்தியோகஸ்தர் சிப்பந்திகள் ஆகியோருக்கு முழு தொழிற் சங்க உரிமைகள், கடந்த பொது வேலைநிறுத்தம் காரணமாக வேலைகளிலிருந்து நீக்கப்பட்டோரை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளுதல், வெளிநாட்டு மூலதனங்களைக் கொண்ட தொழில்களை தேசியமயமாக்குதல், அந்நியநாட்டு வர்த்தகத்தைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளல், கைத்தொழில் விவசாய முன்னேற்றம், மக்கள் முன்னேற்றத்துக்கு சிறந்தவழிவகைகளை வகுத்தல் முதலிய சாலனவும் இருக்கவேண்டுமென்றும் மேலும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பாராளுமன்ற கமியூனிஸ்ட் கட்சிக்கு திரு. பீட்டர் கெனமன் தலைவராக நியமிக்கப்பட்டார். எதிர்க்கட்சியில் ஒரு தலைவர் வேண்டியதில்லையென்றும், அரசியல சட்டத்தில் அதற்கு எதுவிதமான இடமும் இல்லையென்றும் இரு கட்சி முறை சர்க்கார் இருப்பதாலுல்தான் எதிர்க்கட்சிக்குத்தலைவர் வேண்டுமென்றும் திரு.பீட்டர் கெனமன் தெரிவிக்கின்ருர்.

## ஹாலந்தில் விவாகம் செய்த தம்பதிகள்

### மனைவி விவாகரத்து செய்துகொண்டார்

கொழும்பு, அக். 2

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த ஸ்ரீமதி அதிரியானு கெராதா கிரிகென்பெக் தமது கணவரிடமிருந்து விவாகரத்து கோரி மனுச்செய்த வழக்கு கொழும்பு டிஸ்டிரிக்ட் நீதிபதி திரு. வி. எல். சென் கிளெயர் சுவான் முன் விசாரணக்கு எடுக்கப்பட்டது. ஹாலந்தில் 1921-ம் வருடம் செப்டம்பர் 29-ம் தேதி திரு. கிரிகென்பெக்கைத் தாம் விவாகம் செய்ததாகவும் தங்களுக்கு நான்கு பிள்ளைகள் இருப்பதாகவும் 1945-ம் ஆண்டு முதல் தன்னையும் குழந்தைகளையும் பராமரிக்க மறுத்துவிட்டதாகவும் ஸ்ரீமதி கிரிகென்பெக் கூறினர். நீதிபதி அந்த விவாகரத்து மனுவை ஏற்றுக்கொண்டதாக தீர்ப்பளித்தார்.

## புதிய மேற்றிராணியாருக்கு வரவேற்பு

மட்டக்களப்பு, அக். 1

திரிகோணமலை புதிய மேற்றிராணியார் சங். டாக்டர் இக்னேஷியஸ் கிளென்னிக்கு மட்டக்களப்பில் பெரிய வரவற்பளிக்கப்பட்டது.

# மதத்தைத் தழுவிய ராஜ்யம் இக்காலத்திற்கொவ்வாதது

## இந்தியாவை ஹிந்து ராஜ்யமாக்க இடம் கொடேன்

### மத வெறியர்களுக்கு பண்டித நேரு எச்சரிக்கை

புதுடில்லி, செப். 30

டில்லியில் அமைதியை நிலைநாட்ட இந்தியா பிரதம மந்திரி பண்டித நேரு பிரமாண்டமான பொதுக் கூட்டங்களில் பிரசங்கங்கள் செய்து வருகிருர். இன்று நான்காவது கூட்டமான பிரமாண்டமான தொழிலாளர் கூட்டத்தில் அவர் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- நான் பதவி ஏற்ற நாள் முதலாக ஜனங்கள் ஒருவரையொருவர் கொலைசெய்வதைத் தடுக்கவும், அகதி முகாம்களுக்கும், ஆஸ்பத்திரிகளுக்கும் விஜயம் செய்யவும் ஆன காரியங்களைச் செய்யும்படி நேரிட்டதேயொழிய வேறெந்தக் காரியங்களையும் செய்ய முடியவில்லை. இந்தியாவை சுபீட்சமான நாடாக்குவதற்கு நான் போட்டிருந்த திட்டங்கள் எல்லாம் ஸ்தம்பித்துப் போய்க்கிடக்கின்றன.

நாட்டில் சமதர்ம ஜனநாயக சமுதாயத்தை சிருஷ்டிப்பதையே லட்சியமாகக் கொண்டு காங்கிரஸ் எப்பொழுதும் உழைத்து வருகிறது. அப்படிப்பட்ட சமுதாயத்தில் ஜாதி, மதபேதமின்றி பிரஜைகள் அனைவருக்கும் சமத்துவமும் சம உரிமைகளும் அளிக்கப்படும்.

மதத்தின் பெயரால் ராஜ்யத்தை நிறுவுவது மூடத்தனமான பழங்காலக் கொள்கையாகும். ஜனங்கள் மதத்தைப் பின்பற்றலாம். ஆனல் அரசாங்கம் மதத்தைத் தழுவிக்கொண்டிருப்பது இக்காலத்திற்கேற்ற முறையல்ல. நான் அரசாங்கத்தின் தலைவனுக இருக்கும்வரை இந்தியா ஒரு ஹிந்து அரசாங்கமாக ஆக்கப்படுவதற்கு நான் சம்மதமளிக்கமாட்டேன். ஜாதிமத பேதமின்றி எல்லா பிரஜைகளும் சமமான உரிமைகளை அனுபவிக்கும்படியான சமுதாயத்தை சிருஷ்டிக்கவே நான் போராடுவேன்.

பாக்கிஸதானில் அதிகாரிகளின் ஆதரவின் பேரில் ஜனங்கள் எவ்விதம் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை நான் அறிவேன். பாக்கிஸ்தான் தனது மைனாரிட்டி வகுப்பைப் பாதுகாக்கத் தவறியதற்காக நான் அதன் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க விரும்பினேன். ஆனல் அவ்விதம் செய்யமுடியாது நான் தடுக்கப்பட்டிருக்கிறேன். இந்தியாவிலும் பாக்கிஸதானில் நடைபெறுவதுபோல கொலைகள் நடந்தால் நான் எவ்விதம் பாக்கிஸதான் மீது நடவடிக்கை எடுக்க முடியும்? இந்தியாவின் துருப்புகள் பாக்கிஸதான் சென்று அங்குள்ள மைனரிட்டிகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக இந்தியாவில் கலகங்களை அடக்கவும் ஆஸபத்திரிகளைப் பாதுகாக்கவுமான வேலைகளில் ஈடுபடும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

### பிரிட்டன் ஆலோசனை

லண்டன், செப். 30

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய உறவு உதவி மந்திரி கார்ட்டர் இந்தியாவுக்கும் பாக்கிஸதானுக்கும் விஜயம் செய்திருக்கிருர். அவர் அங்குள்ள நிலைமையை அறிந்து வெள்ளிக்கிழமை இங்கு திரும்பி வந்து பிரிட்டிஷ் மந்திரி சபைக்கு விஷயங்களைத் தெரியப்படுத்துவார். பாக்கிஸதானுக்கும் இந்தியாவுக்குமிடையே மத்தியஸதமாகவேலை செய்துவரும் லார்டு இஸமேயும் அவருடன் வருவார் என்று சொல்லப்படுகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் லார்டு மவுண்ட்பேட்டனும் பிரிட்டன் திரும்பிவிடுவார் என்று பரவியுள்ள செய்திக்கு ஆதாரமில்லை.

பாக்கிஸதான் வேண்டுகோளைப்பற்றி சாம்ராஜ்ய நாடுகள் இன்னும் ஆலோசனை செய்து வருகின்றன. ஆஸதிரேலிய பிரதம மந்திரி சீப்லி டில்லியிலுள்ள ஆஸதிரேலிய ஹைகமிஷனருடனும், மற்ற சாம்ராஜ்ய நாடுகளுடனும் ஆலோசனை நடத்திவருகிருர்.

### பஞ்சாப் நிலைமை

புதுடில்லி, செப். 30

பாட்டியாலா சமஸதானம் கலகப் பிரதேசமென பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. எவரும் ஆயுதம் தாங்கிச் செல்லலாகாதென தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

நாளை டில்லியில் நடைபெறும் கூட்டுப் பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டத்தில் கலந்து கொள்ள பாக்கிஸதான் பிரதமர் லியாகத் அலி கான் லாகூரிலிருந்து டில்லிக்கு பறந்து வருவார்.

### வெள்ளக் கொடுமை

இமயமலையிலிருந்து பெருக்கெடுதது வந்த வெள்ளம் யமுனு நதியில் கரைபுரண்டோடியதால் கிழக்கு பஞ்சாப்பும் டில்லியும் பாதிக்கப்பட்டன.

டில்லி பிரதேசத்தில் 40 ஆயிரம் ஜனங்கள் வெள்ளத்தில் அகப்பட்டுத் தவித்தனர். 100 கிராமங்களை வெள்ளம சூழ்ந்து கொண்டது படகுகளும் விமானங்களும் கஷ்டபடும் ஜனங்களைக் காப்பாற்றின. இப்பொழுது வெள்ளம் குறைந்து விட்டது.

### மசூதியில் ஆயுதங்கள்

கான்பூர், செப். 30

இங்குள்ள மசூதியில் தரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஏராளமான துப்பாக்கிகள், குண்டுகள், கத்திகள், ஈட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன. 8 மணி நேரம் போலிசார் பரிசோதனை செய்து சர்க்கார் உத்தியோகஸதர்கள் உட்பட 20 பேர்களைக் கைது செய்தனர்.

### ஜூனகத் பேர்ட்டி சர்க்கார்

ராஜகோட்டை, செப் 30

இஙகு வந்து முகாம் போட்டிருக்கும் ஜூனகத் சமஸதான போட்டி சர்க்கார், இஙகுள்ள ஜூனகத் சமஸதானத்தைச் சேர்ந்த மாளிகையைக் கைப்பற்றி அதன் மீது மூவர்ண தேசியக் கொடியைப் பறக்க விட்டனர்.

## 10 லட்சம் பேருக்கு ராணுவப் பயிற்சி

லக்னே, செப். 30

ஐக்கிய மாகாணததில் கிராமாந்திரஙகளிலே பாதுகாவல ஏற்படுத்தும் பொருட்டு ஒரு வருடத்திற்குள் ராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு 10 லட்சம் தொண்டர்கள் திரட்டப்படுவர் என்று நிதி மந்திரி திரு பாலிவால் தெரிவித்தார்.

## கொழும்புக்கு புதிய மேற்றிராணியார்

### பிரிட்டிஷ் மேற்றிராணிமார் தெரிவு செய்வர்

கொழும்பு, அக். 2

இலங்கை தேவாலயங்களின் திருச் சபையினர் கொழும்புக்கு ஒரு மேற்றிராணியாரைத் தெரிவுசெய்ய நேற்று முன் தினம் காலை 9-30 மணி முதல் இரவு 9 மணி வரை நடந்த சபைக் கூட்டத்தில் விவாதித்தனர். இவர்கள் ஒருவரையும் தெரிவு செய்ய முடியவில்லை. பலத்த விவாதங்களின் பின் வாக்குகள் எடுக்கப்பட்டபோதும் திருப்திகரமானபடி ஒன்றும் நடக்கவில்லை கொழும்பு உதவி மேற்றிராணியார் சங். லக்தாஸா டிமெல்லும் மேற்றிராணியார் பதவிக்கு முன்வந்த அபேட்சகரில் ஒருவராகும். இவருக்கும் போதிய வாக்குகள் கிடைக்கவில்லை. முடிவில் கொழும்பு மேற்றிராணியார் தெரிவுசெய்யப்படும் பொறுப்பை கன்டர்பெரி, யோர்க் அதிமேற்றிராணியார்களுக்கும் லண்டன் மேற்றிராணியார்களுக்கும்விடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

## பிரான்ஸில் கள்ள டாலர் நோட்டு

### கண்டுபிடிக்க போலிஸுக்கு அமெரிக்க நிபுணர் உதவி

பாரிஸ், அக் 1

இப்பொழுது ஏற்பட்டுள்ள டாலர் நெருக்கடியினுல் பலவித கஷ்டங்களும் ஏற்பட்டுள்ளன ஐரோப்பிய டாலர் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு மார்செயில்ஸ் என்னுமிடத்தில் ஒரு கோஷ்டி 58,00,000 பவுண் மதிப்புள்ள கள்ள நோட்டுகளைத் தயார் செய்திருந்தது. இக்கோஷ்டியினரில் 12 பேர்களை நேற்று முன்தினம் கைதுசெய்ததினுல் இத்தொகையைக் குறிக்கும் கள்ள நாணய நோட்டுகள் உபயோகத்திற்கு வருவது தவிர்க்கப்பட்டது.

அமெரிக்க நிபுணர்கள் உதவியுடன் போலிஸ் அதிகாரிகள் மார்ஸெயில்ஸில் இரண்டு வீடுகளை சோதனை செய்து கள்ள நாணய நோட்டுகளை தயார் செய்யும் இரு அச்சியந்திரசாலைகளைக் கண்டுபிடித்தனர். இந்த 50 டாலர் 100 டாலர் கள்ள நோட்டுகளும் ஏராளமாகக் கண்டு பிடிக்கப்பட்டன. இஙகு கள்ள நோட்டுகள்வேறு இடத்துக்கு அனுப்பப்படத் தயாராக வைக்கப்பட்டிருந்ததென்று கூறப்படுகிறது. இங்கு 20 இயந்திர துப்பாக்கிகளும் ரிவால்வர்களும் வெடிமருந்துகளுமிருந்தன.

இந்தோ-சீன வங்கியில் நடைபெற்ற களவு சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட மார்ஸெல் வேர்ஜல என்பவரது அறிக்கைக்குப் பின்னரே இந்த சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டது. அமெரிக்காவிலும் அமெரிக்க ஆதிக்கத்திலுள்ள ஜெர்மனியிலும் சமீபத்தில் சடுதியில் கள்ள நாணய நோட்டுகள் அதிகரித்ததற்கு இக் கோஷ்டியே பொறுப்பென்று போலிஸார் நம்புகின்றனர். [ராய்ட்டர்]

## அரிசி ரேஷன் அதிகரிக்கப் படலாம்

### அடுத்த வருடம் இலங்கைக்குஅதிகஅரிசி

கொழும்பு, அக். 2

அடுத்த வருடம் முதல் இலங்கைக்கு அதிக அரிசி கிடைக்குமென்று கூறப்படுவதால் அடுத்த வருடம் அரிசி ரேஷன் ஒரு கொத்திலிருந்து கூட்டப்படக் கூடும் என்று தெரிகிறது. மாதவீதம் பேலதிகமாக 12,000 டன் அரிசி வேண்டுமென்று லண்டனிலும், வாஷிங்டனிலும் உள்ள அதிகாரிகளுக்கு சர்க்கார் விண்ணப்பித்துள்ளது இந்தக் கோரிக்கை கவனிக்கப்படுமென்று நம்பப்படுகிறது.

## காந்தி ஜெயந்தி

### இன்று இந்திய காரியாலயங்களுக்கு விடுமுறை

கொழும்பு, அக். 2

இலஙகையிலுள்ள இந்திய சர்க்காரின் எல்லாக் காரியாலயங்களும் இன்று காந்திஜியின் 78-வது ஜெயந்தியை முன்னிட்டு மூடப்படும். இக்காரியாலயங்களில் வேலை செய்யும் உத்தியோகஸதர் முதலானேருக்கு இத்தினம் விடுமுறையாகும்.

## கள்ள மார்க்கெட்டில் ஜவுளி வர்த்தகம்

### வெகுவாகக் குறைந்து விட்டது

கொழும்பு, அக் 2

சமீபகாலத்தில் ஜவுளி விற்பனையில் கள்ளமார்க்கெட்டு வியாபாரம் வெகுவாகக் குறைந்துவிட்டதென்று ஜவுளிக் கட்டுப்பாட்டிலாகா அதிகாரி ஒருவர் தெரிவிக்கின்ருர். சமீபத்தில் ஜவுளி வர்த்தகர்களுக்கு ஒதுக்கப்படும் லாப விகிதம் குறைக்கப்பட்டுள்ளதாக கட்டுப்பாட்டதிகாரி விடுத்த அறிக்கை காரணமாக அநேக வர்த்தகர்கள் தங்களிடமுள்ள இருப்பு ஜவுளிகளுக்கு விலை அடையாளம செய்யவில்லை. இப்பொழுதுள்ள தகராறுகள் முடிவடையாததால் கொழும்பில் அதிக ஜவுளிகள் விற்பனைக்கு விடப்படவில்லை.

## புதிய மந்திரிகளுக்கு காரியாலய வசதிகள்

கொழும்பு, அக். 2

புதிய மந்திரிமார் தங்கள் காரியாலயங்களுக்குத் தகுதியான இடங்களை அமைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இப்பொழுது சில புதிய மந்திரிமாரின் காரியாலயங்களுக்கு இட வசதியில்லையென்று தெரிகிறது.

பல இலாகாக்களுக்கு அமைக்கப்பட்ட உபபகுதிகள் சர்க்கார் காரியாலயங்கள் இருக்குமிடத்திலிருந்து அகற்றப்பட்டு யுத்த காலத்தில் இராணுவத்தினர் கால்பேஸ் பகுதியில் அமைக்க கட்டிடங்களில் வைக்கப்படுமென்றும் சர்க்கார் காரியாலயப் பகுதியில் இவ்விதம் கிடைக்கும் இடங்களில் புதிய இலாகாக்களை வைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது.

பழைய மந்திரிமார் தங்களிடமிருந்த பொறுப்புகளைப் புதிய மந்திரிகளிடம் ஒப்படைத்துவிட்டனர். புதிய மந்திரி சபையில் இடம்பெறும் மந்திரிமார் தங்களுக்குரிய காரியாலயங்களில் வேலை செய்கின்றனர் காரியாலயங்கள ஒதுக்கப்படாதவர்கள் அவற்றினை அமைக்கும்வரை தங்கள் கடமைகளை ஆற்றத் தாமதிக்கவேண்டியிருக்கிறது. கொழும்பில் இப்பொழுது இல்லாத மந்திரிமார் இன்று கொழும்புக்கு வந்து பிரதம மந்திரியைச் சந்திப்பார்கள் என்று தெரிகிறது.

## இஸ்லாமிய கலாச்சார சங்க 2-வது ஆண்டு விழா

கொழும்பு, செப். 30

சோனகர் இஸலாமிய கலாச்சார சஙகத்தின் இரண்டாவது வருடாந்த மகாநாடு ஜனுப் ஏ. ஆர். ஏ ராஸிக் தலைமையில் நடைபெற்றது. இக்கலாச்சார சஙகம் அரசியல்கலப்பற்றஸதாபனமென்றும் ஒரு சமூகத்தின் போக்கை யாற்றியமைக்க முடியாதென்றும் தலைவர் பேசுகையில் குறிப்பிட்டார். இதன் பின்னர் வருடாந்த அறிக்கை விபரஙகள் தெரிவிக்கப்பட்டன. இச்சஙகத்தின் நிர்வாகக் கமிட்டியினரும் தெரியப்பட்டனர். சமீப வெள்ளப்பெருக்கின் போது இச்சங்கத்தின் தொண்டுகள் பற்றி பேசப்பட்டது.

## இந்தியா-ஜப்பான் வர்த்தகத் தொடர்பு

### ஜவுளி சப்ளை வருகிறது

புதுடில்லி, செப் 30

இந்தியாவுக்கும் ஜப்பானுக்குமிடையில் சுமார் 7 வருட இடைக்காலத்தின்பின் திங்கட்கிழமை முதல் மீண்டும் வர்த்தக தொடர்புகள் ஆரம்பித்துள்ளன. திங்கட்கிழமை ஜப்பானுக்கு 30,000 சிப்பம் பருத்தியுடன் கராச்சியில் இருந்து "தப்தி" என்னும்கப்பல் புறப்பட்டுள்ளது. அக்டோபர்-நவம்பரில் இரு நாடுகளிலிருந்தும் பொருள்கள் அனுப்பப்படும். ஜப்பானுக்கு 170,000 சிப்பம் பஞ்சு இந்தியாவிலிருந்து ஆறு கப்பல்களில் அனுப்பப்படும். ஜப்பானிலிருந்து 800 லட்சம் கஜம் ஜவுளியை இக் கப்பல்கள் ஏற்றி வரும். அக்டோபர் 10-ம் தேதி புறப்படவிருக்கும் "ஜலதூத" என்னும்கப்பல் பம்பாய் துறைமுகத்தில் 30,000 சிப்ப பருத்தியை ஏற்றுகிறது. இதுவே முதலில் ஜப்பானுக்குச் செல்லும் கப்பலாகும். ஜப்பானிலிருந்து 250 லட்சம் கஜம் ஜப்பானிய ஜவுளி இந்தியாவுக்கு வந்துகொண்டிருக்கிறது. திஙகட்கிழமை பம்பாய்க்கு வந்த ஒரு கப்பலில் 3000 டன் ஜவுளி வந்துள்ளது. அக்டோபர் 7-ம் தேதி வரும் என்று எதிர்பார்க்கப்படும் கப்பலிலும் ஜவுளி வருகிறது. (அ-பிரஸ)

## திரு எட்ஸல் போர்ட்டின் சொத்து வரி

நியூயார்க், செப். 30

அமெரிக்காவிலே 1943 மே மாதம் இறந்த திரு. எட்ஸல் போர்ட் என்னும் திரு. ஹென்ட்ரி போர்ட்டின் மகன் போர்ட் மோட்டார் கம்பெனியில் 1,212,920 பங்குகள் சொந்தமாக வைத்திருந்தார். அவருடைய சொந்த சொத்துக்கள் 2750,000 பவுண் மதிப்புள்ளவை யென்றும், அவருடைய மொத்த எஸடேட்டுகள் 30,000,000 பவுணுக்கு மேற்பட்டவை என்றும் கூறப்படுகிறது. போர்ட் மோட்டார் கம்பெனி பஙகு 22 பவுண் 10 ஷிலிங்காக மதித்து திரு. எட்ஸல் போர்ட்டின் சொத்து மீதுள்ள வரி இப்பொழுது 2 200 000 பவுண் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

## ஒலிம்பிக் விளையாட்டு போட்டி

### 50 நாடுகள் பங்குபற்ற சம்மதம்

லண்டன், செப். 30

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி அடுத்த வருடம் நடக்க இருக்கிறது. அதில் பங்குபற்றிக் கொள்ளும்படி அனுப்பப்பட்ட அறிக்கையை 50 நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. 1908-ம் வருடத்தில் லண்டனில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடந்தபோது 18 நாடுகளே பங்குபற்றியிருந்தன. (ராய்ட்டர்)

கமலா டைலர் மனுபாக்ஷரிங்கம்பெனி
நிர். 77. கல்பொக்கை வீதி,
கொட்டாஞ்சேனை.
டைலர் தயாரிப்பதற்குவேண்டிய பூராவான இயந்திரமும் உபகரணங்களும் எம்மிடம் விற்பனவுக்கு இருக்கின்றன.
கீழ்க்கண்டவருக்கு விண்ணப்பஞ்செய்க:-
வீ. எம். வேலாண்டீ,
77. கல்பொக்கை வீதி,
கொட்டாஞ்சேனை.

அரிய நூல் வெளிவந்து விட்டது!
பாக்கிஸ்தான் விளக்கம்
ஜனப் துர்ராணி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நாலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸதானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.
அழகிய முகப் படம்
320 பக்கங்கள் கிளேஸ் கடிதம்
சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.
முந்துங்கள் விலை ரூ. 3-50
இந்தியா ரூ. 3-8-0.
V. P. வேறு
கிடைக்கும் இடங்கள்:-
V. M. ஷம்சுத்தீன்,
85, பழைய சோனகத்தெரு, கொழும்பு.
எஸ். கே. ஷேக்முகம்மது,
பிரதர்ஸ் (மரைக்கார் கடை)
பூக்குளம் பார்க்கிற்கு எதிரே
திருச்சிறப்பள்ளி.

நியூ ஒலிம்பியா
இன்றுதொடக்கம் தினசரி மாலை 3-15 6-15, 9-30 மணிக்கும், சனி, ஞாயிறுகளில் விசேஷமாக காலை 10-15 மணிக்கும் காட்சிகள்.
மிகவும் நூதனமானதும், நெடியதுமான உற்சாகச் செய்திகள்!
அன்டியின் கலர்சாலைப் பிற்போக்கு-
படிப்பு முன்னேற்றத்தைத் தடைசெய்த மூன்று கட்டழகிகள்!
காதலைப்பற்றிப் படித்ததென்ன என்பதை தட்டிக்காட்டும் சம்பவம்!!
ஆச்சரியமூட்டும் செய்திகள்!!!
"லவ் லாவ்ஸ் அட் அன்டி ஹாடி"
மிக்கி றூணி, லூயிஸ் ஸ்டோன், சாராஹேடன் முதலியோர் நடித்தது.

கிரவுன்
தியேட்டர்
ஸ்கின்னர்ஸ் ரோட்
மருதானை
இப்பொழுது தினசரி மாலை 6-15 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும், சனி ஞாயிறு மெட்னி 3 மணிக்கு.
சித்ரகலா தயாரித்த உன்னத தமிழ் படம்!
தாய் நாடு
மகத்தான 2-ம் வாரம்
அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது
மெட்ருஸ மெயில் புகழ் பாட்லிங் மணியும் புதிய நடிகை சுந்தரியும் மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது
பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பெல்கானிக்கு அரைசார்ஜ் எடுக்கப்படும்




சிலோன் நியூஸ்பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ,தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.